தேவகோட்டையில் வாழ்ந்த ஞானிகளும் தமிழ்ச் சான்றோர்களும்

முனைவர்
சபா. அருணாசலம்

முல்லை
பதிப்பகம்

தேவகோட்டையில் வாழ்ந்த ஞானிகளும் தமிழ்ச் சான்றோர்களும்

தேவகோட்டையில் வாழ்ந்து வரலாற்றில் இடம்பெற்ற 18 சான்றோர்களின் வாழ்க்கைக் குறிப்புகள்

முனைவர் சபா. அருணாசலம்

முல்லை
பதிப்பகம்
323/10, கதிரவன் காலனி
அண்ணாநகர் மேற்கு, சென்னை 40
செல்.: 9840358301
e-mail: mullaipathipagam@yahoo.com

முதற் பதிப்பு : 2021
பக்கங்கள் : 64
விலை : ரூ.50/-

புகைப்படங்கள் உதவி:
முனைவர் சே.குமரப்பன், தேவகோட்டை

**15.7.18 இல் தொடங்கிய
கோவை விஜயா பதிப்பக வாசகர் திருவிழா
புத்தகக் கண்காட்சியில் தினமணி ஆசிரியர்
கி.வைத்தியநாதன் சிறப்புரையிலிருந்து...**

'முல்லை' முத்தையா, 'சக்தி' வை.கோவிந்தன், 'தமிழ்ப் பண்ணை' சின்ன அண்ணாமலை ஆகிய மூவரும் பதிப்புத் துறைக்கு ஆற்றிய பணி அளப்பரியது. கர்நாடக இசை நிகழ்ச்சி நடைபெறும்போது மும்மூர்த்திகளின் புகைப்படங்களை வைப்பதைப் போன்று, இனி தமிழகத்தில் புத்தகக் கண்காட்சிதோறும் இந்த முன்னோடிகளின் படங்கள் இடம் பெற வேண்டும். அவர்கள் தொடர்பான குறிப்பும் இன்றைய தலைமுறையினர் தெரிந்து கொள்ளும் வகையில் வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

- **தினமணி**, 16.7.2018

அச்சிட்டோர் : கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை - 2.

உள்ளுறை

தேவகோட்டையில் வாழ்ந்த ஞானிகளும் தமிழ்ச் சான்றோர்களும்

- முனைவர் சபா.அருணாசலம்




சைவமும் தமிழும் தழைத்தினிய ஓங்கி வளர்ந்த தேவகோட்டையில் அதற்குக் காரணமாக இருந்த ஞானிகள் தமிழ்ச் சான்றோர் சிலரது வாழ்க்கைக் குறிப்புக்கள் இங்கு இடம்பெறுகின்றன. அவர்கள் இளைய தலைமுறைக்கு வழிகாட்டியாக விளங்குவர்.

1. கோவிலூர் ஆதீனம் அருணாசல ஞானதேசிக சுவாமிகள் [இரண்டாவது பட்டம்]
2. கோவிலூர் ஆதீனம் கருணாநிதி சுவாமிகள் [மூன்றாவது பட்டம்]
3. கோவிலூர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாதேவ சுவாமிகள் [7ஆம் பட்டம்]
4. சிவாகம சித்தாந்த பரிபாலனச் சங்கம்
5. சேக்கிழார் திருநாட் கழகம்
6. வன்றொண்டர் செட்டியார்
7. தமிழ் வள்ளல் மெய்யப்பனார்
8. பெரிய மைனர் தேவகோட்டை இராமநாதன் செட்டியார்
9. வீர.லெ. சிந்நயச் செட்டியார்
10. வெ.ஆதி.மா. சிதம்பரம் செட்டியார்
11. தொண்டிச் செட்டியார்
12. ஜமீந்தார் அருணாசல சுவாமிகள்
13. பாலகவி வே. இராமநாதன் செட்டியார்
14. சின்ன அண்ணாமலை
15. முல்லை முத்தையா
16. முனைவர் சுப. அண்ணாமலை
17. வானதி திருநாவுக்கரசு
18. தமிழ்வாணன்

1

கோவிலூர் ஆதீனம்
அருணாசல ஞானதேசிக சுவாமிகள்
[இரண்டாவது பட்டம்]



ஸ்ரீ ல ஸ்ரீ அருணாசல ஞான தேசிகர் சுவாமிகள் (இரண்டாவது பட்டம்)
(1847 - 1849)

அருணாசல ஞான தேசிக சுவாமிகள் என வழங்கும் துறவாண்டவர் வரலாறு 1815-1849.

தோற்றமும் துறவும்

செட்டி நாட்டில் திருவும் அருளும் நிறைந்த நகர் தேவகோட்டை ஆகும், அங்கு நகரத்தார் குலத்தில், இலுப்பைக்குடிக் கோத்திரத்தில் வினைதீர்த்தான் செட்டியாருக்கும் முத்தாத்தாளுக்கும் புதல்வராய் சுமார் கி.பி. 1815இல் யுவ ஆண்டு பிறந்தார் ஸ்ரீலஸ்ரீ அருணாசல ஞான தேசிக சுவாமிகள் இளமையிலேயே அவருக்குச் சிவபக்தியில் ஈடுபாடும், துறவில் நாட்டமும் இருந்தன செல்வக் குடும்பத்தில் பிறந்தும் அருட்செல்வத்திலேயே அவரது கருத்துச் சென்றது. இருப்பினும் அவரது பெற்றோர் அவரை வணிகத்தில் ஈடுபடுத்தினர். திருநெல்வேலிக்கு அவர் ஒருமுறை வணிக நிமித்தமாய்ச் சென்றிருந்தார். அப்பொழுது

அங்கிருந்த கண்டனூர் அருணாசலம் என்பவருடன் நட்புக் கொண்டார். இருவரும் சிவபக்தியிலும் சேர்ந்து திளைத்தனர். எனவே, இருவரும் திட்டமிட்டுக் கோவிலூரை அடைந்து, ஸ்ரீலஸ்ரீ முத்துராமலிங்க ஆண்டவரைச் சரணடைந்து மாணவர் ஆயினர். அப்பொழுது ஸ்ரீலஸ்ரீ துறவாண்டவருக்கு வயது 19. அன்று முதல் இருவரும் வீடு வாசலை மறந்தனர். பெற்றோரைத் துறந்தனர். ஆசிரியர் அருளால் அவரிடம் பஞ்சதசி, கைவல்யம் முதலிய வேதாந்த சாத்திரங்களைக் கற்றுத் தெளிந்தனர். திருப்பாதிரிப்புலியூர் முத்துச் சரவண சுவாமிகளிடம் 32000 வாசிட்டம் கற்றனர். மிக்க விரக்தியினால் பரணிப்பிரபந்தம் என்னும் நூலும் பாடம் கேட்க விரும்பினர். அந்நூல் அவர்கட்கு எங்குமே கிடைக்கவில்லை.

பரணிப்பிரபந்தம் எங்கே கிடைக்கும் என்ற விசாரணையில் அவர்கள் ஈடுபட்டனர். அப்பொழுது குன்றக்குடி ஆதீனத்தின் முப்பத்தைந்தாவது பட்டத்து மடாதிபதியாக இருந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகதேசிகரிடம் அந்நூலின் பிரதி ஒன்று இருப்பதாக அறிந்து அவரிடம் சென்றனர். அவரை வணங்கி நூற்பிரதி வேண்டினர். அதற்கு அவர் "பரணி படித்துத் துறவு கொள்ளப் போகிறீர்களோ" என்று வேடிக்கையாகக் கூறிப் புன்முறுவல் பூத்தார். பிறகு அந்நூலைக் கொடுத்து ஆசி கூறி அனுப்பினார், இருவரும் பதில் பேசாது கோவிலூருக்குச் சென்றனர். ஸ்ரீ முத்து ராமலிங்க ஆண்டவரிடம் அதனைக் கொடுத்துப் பாடம் படித்தனர். விரைவில் துறவு பூண்டிட அவர் தம் உள்ளங்கள் துடித்தன. அதற்கேற்ற வாய்ப்பை அவர்கள் எதிர்பார்த்து இருந்தனர்.

ஒருநாள் அவர்கள் தம் குருவிடம் பாடம் கேட்டு உணவு உண்டபின், அவரது திருவடிகளை வருடியவாறு இருந்த நல்ல சமயத்தில் "துறவு பூண அனுமதி" கேட்க, அவரும் அதற்கு இசைந்து அனுமதி வழங்கினார். அவர்கள் அவ்வாணையைத் தலைமேற்கொண்டு கொற்றவாளீசர் ஆலயத்தினை அடைந்து தம் துறவு முற்றுப் பெற்று நன்கு விளங்க இறைவனையும் இறைவியையும் வேண்டினர். பிறகு நெடுங்குடி என்னும் ஊரில் ஆதிகுரு தட்சணாமூர்த்தி சந்நிதியில் துறவு மேற்கொண்டு சிதம்பரம் சென்றனர்.

சிதம்பர வாழ்க்கை

சின்னத் துறவாண்டவர் (கண்டனூர் அருணாசல சுவாமிகள்) வடக்கு கோபுரத்தில் தனியே மனனத்தில் ஈடுபட்டார். நமது பெரிய துறவாண்டவர் தேவகோட்டை ஸ்ரீலஸ்ரீ அருணாசல ஞான தேசிக சுவாமிகள் அடியார்கட்கு உபதேசிக்கும் காலம் தவிர மற்ற .... கேணி மடத்து ஒடுக்கத்தினுள் தியானம் செய்யலானார் ஆலய வழிபாட்டின் போது இருவரும் சந்திப்பர். ஆண்டுதோறும் கோவிலூரில் நடைபெறும் குருபூஜை, திருநெல்லை அம்மை திருவிழா ஆகியவற்றுக்கு வந்து திரும்புவர். நடராசப் பெருமானிடம் அளவிலா அன்பு கொண்டு பக்தி வழியில் ஒழுகினர். பிச்சை ஏற்று உண்டு வந்தனர்.

சுவாமிகள் பிச்சை பெறும் முறையே தனி. வீட்டின் முன் சென்று கைதட்டி உணவு கேட்பர். குறிப்பிட்ட சிறிது நேரத்தில் உணவு கிடைக்காவிட்டால் உடனே அவர்கள் அடுத்த வீட்டுக்குச் சென்று விடுவர். அவர்கள் வழக்கமாக ஒரு வீட்டில் பிச்சை பெற்று வந்தனர். அந்த வீட்டு மாதரசி நற்பண்புகள் நிறைந்தவள். துறவியரை உபசரிப்பதில் காலம் தாழ்த்தாதவள். அன்று சுவாமிகள் வந்த பொழுது சோறு வெந்து கொண்டிருந்தது. சுவாமிகள் வந்ததும் கைதட்டினர். காத்திருந்தனர். வெந்த சோற்றைச் சூட்டோடு அந்த அம்மை எடுத்து வந்து துறவாண்டவர் கையில் இட்டாள். அது கொதித்தது. எனவே, துறவாண்டவர் அதனை வீட்டுச் சுவரில் அறைந்தார், அது சுவரில் கூழாக ஒட்டிச் சூடு தணிந்தது. உடனே சுவாமிகள் அதனை வழித்து உண்டார். சூட்டோடு பிச்சை இட்டதற்காக அம்மையார், சுவாமிகளிடம் மன்னிப்புக் கேட்டார், அதற்குச் சுவாமிகள், "தாயே! உன் மீது யாதொரு குறையும் இல்லை. எம்மைக் காலம் தாழ்த்த நினையாமல் நீ பிச்சையிட்டாய். அதில் தவறு ஒன்றும் இல்லை" என்று கூறி அம்மையை வாழ்த்திச் சென்றனர்.

தம்மைச் சரணடைந்த நித்தியானந்த சுவாமிகள், வளவனூர் சண்முக சுவாமிகள், திருநெல்வேலி சுப்பிரமணிய சுவாமிகள், மதுரை சுப்பராய சுவாமிகள் முதலிய துறவிகளுக்கும், பாகனேரி முத்துக் கருப்பையா, மதுரை மெய்யப்பையா முதலிய இல்லறத்தாருக்கும் நாடோறும்

தர்க்கயுக்தி, அனுமானங்களோடு துறவாண்டவர் அவர்கள் சத்சாத்திரங்களைக் கற்பித்து வந்தனர். சுவாமிகளின் தம்பி கருணாநிதி கோவிலூரரை விட்டுத் திருப்பெருந்துறை சென்று வதிந்த காலத்தில் அன்னாரைக் கோவிலூருக்குத் திரும்பச் செய்யவும். ஆண்டவருக்கு முன்போல் சேவையில் ஈடுபடுத்தவும் வேண்டி "சீடா சாரம்" என்ற நூலைத் தொகுத்து "சிதம்பரத்திடம் ..... கொடுத்து வா" என்று சீடர் ஒருவரை சுவாமிகள் அனுப்பினார். அதன் பயனாய்க் கருணாநிதி அவர்கள் கோவிலூர் திரும்பி ஆண்டவருக்குப் பணிவிடை செய்யலானார்.

சுவேதாரண்யத்தில்

ஒரு முறை சுவாமிகள் இருவரும் சுவேதாரண்யம் எனப்படும் திருவெண்காட்டுக்குச் சென்று ஆலயத்தில் திருவெண்காடரை வழிபட்டு சந்நிதியில் நின்றனர் ஆதி சைவரிடம் விபூதி பெற்றுப் பிறகு வீதியில் பிச்சைக்குச் சென்றனர். அது அகாலமானதால் பிச்சை கிடைக்கவில்லை. எனவே, இருவரும் பசியோடு ஆலயத்துள் வந்து, அர்த்தசாம தரிசனம் செய்து, முக் குளத்தில் இரண்டு கை நீர் அருந்தி, சிவபெருமானைச் சிந்தித்தவாறு குடவரையில் உறங்கினர். அச்சமயம் சிவ பெருமான் அவர்கள் மீது கருணை கொண்டு, ஆதி சைவரின் வடிவத்தில் அவர்கள் முன் தோன்றி இருவர் கையிலும் சர்க்கரை அன்ன மிட்டார். அவர்கள் அதனை மகிழ்ச்சியோடு உண்டு, கைகழுவி உறங்கினர். மறுநாள் அவர்கள் இறைவனை வணங்கச் சந்நிதிக்குச் சென்ற பொழுது விபூதி வழங்கிய சைவர் அவர்களிடம், "இரவில் எங்கு உணவுண்டீர்கள்?" என்று வினவினார். அதற்கு அவர்கள் வியந்து நீங்கள் தானே சர்க்கரை அன்னம் இட்டீர்கள்" என்றனர். உடனே ஆதி சைவர் தான் உணவளிக்கவில்லை என்றார். மூவரும் அது இறைவனின் திருவிளையாடல் என்றெண்ணி மகிழ்ந்தனர்.

திருவண்ணாமலை, திருப்பதி

சுவாமிகள் இருவரும் ஒரு முறை திருவண்ணாமலைக்குச் சென்று அங்குள்ள வனத்தில் வசிக்க வேண்டும் என்னும் கருத்தால் அம்மலையை நோக்கி சென்றனர். அப்பொழுது மேட்டுச் சாவடியில் இருந்த சேவகர்கள் அவர்களைத்

தனியே செல்ல லாகாது என்று தடுத்தனர். அதற்கு அவர்கள், "எங்களுக்கும் தடை உளதோ?" என்றனர். "ஆம். உங்கள் இடையில் காவி உடை உள்ளதே" என்றனர். உடனே அவர்கள் தம் நோக்கத்துக்குத் தடையாய் இருந்த காவி உடையைக் கழற்றி வைத்துவிட்டுத் திகம்பரராய் அருணகிரியை அடைந்தனர். ஈசானிய சுவாமிகள் மடத்திலும், மலையிலும், மலைக் காட்டிலும் ஆகப் பல நாள் அவர்கள் தனித்தும் சேர்ந்தும் வசித்தனர். பிறகு திருப்பதி, திருக்காளத்தி முதலிய தலங்கட்குச் சென்று இறைவழிபாடு செய்தனர். காய், கனி, கிழங்குகளை உண்டு பசியாறினர். பல நாள் கழித்து மீண்டும் தில்லையை அடைந்தனர்.

மீண்டும் சிதம்பர வாசம்

மீண்டும் சிதம்பரம் வந்துற்ற ஸ்ரீ சுவாமிகள் இருவரும் நடராச தரிசனத்தில் ஈடுபட்டனர். அப்பொழுது யாழ்ப்பாண நல்லூர் ஆறுமுக நாவலர் என்னும் புகழ்பெற்ற சிவனடியார் அங்கு வந்திருந்தார். அவர் சுவாமிகளின் திறமறிந்து, மெய்ம்மறந்து வியந்து அவர்களைப் பின்தொடர்ந்து சென்று வணங்கினார். துறவாண்டவர் அவரை "யார்?" என்று வினவ, அதற்கு அவர் தன் பெயரையும், நடராசரை வழிபட வந்த தன்மையையும் பற்றிக் கூறினார். அவருக்கு, சுவாமிகள் அருள்பாலித்து, அவரது நற்குண நல்லொழுக்கத்துக்கு வியந்து வாழ்த்தினர். "நாடோறும் பகல் 15 நாழிகைக்கு மேல் கந்தபுராணச் சொற்பொழிவு செய்யுமாறும், பாதிரிகளுக்குப் பாடம் சொல்லுதலை நிறுத்திப் புராணப் பிரசங்கத்தில் ஈடுபடு மாறும்" ஆணையிட்டனர். அவ்வாறே நாவலர் பணியாற்றினார். அவரது சொற்பொழிவைக் கேட்டுச் சுவாமிகள் பேருவகை உற்றனர்.

சின்னத் துறவாண்டவர் மறைவு

தில்லையில் இருவரும் நீண்ட நாள் வசித்தனர். ஒரு நாள் நடராசப் பெருமான் சின்னத் துறவாண்டவரின் முன் காட்சியளித்து, "அவரைக் காசிக்குச் சென்று, கங்கை ஆடி விசுவநாதரை வழிபட" ஆணையிட்டார். அங்ஙனமே அவர் பெரிய துறவாண்ட வரிடமும், கோவிலூர் முத்துராமலிங்க ஆண்டவரிடமும் அறிவித்து விடைபெற்றுக் காசிக்குச் சென்றார். கங்கை விசுவநாதரை வழிபட்டு,

அங்கேயே வசித்து வந்தார். ஒரு நாள் அவர் அங்கிருந்த திருவாவடுதுறை மடத்து நமச்சிவாயத் தம்பிரானிடம், "குரோதி ஆண்டு ஆனி மாதம் 31ஆம் தேதி, சுக்கிர வாரம், பத்து நாழிகைக்கு இத்தேகத்து உயிர் மறையும். இதனை எனது குருநாதர் கோவிலூராண்டவருக்குத் தெரிவிக்கவும்" என்று கூறினார். நமச்சிவாயத் தம்பிரானும் அதற்கு இசைந்து, இரண்டு அடியார்களை அவருக்குத் துணையாக அமர்த்தினார்கள். கூறியபடி அவரது உயிர் குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட நேரத்தில் மறைந்தது. உடனே அவரது பூத உடலைக் கல்தொட்டியில் அடக்கம் செய்து, கங்கையில் இறக்கிவிட்டுச் செய்தியைக் கோவிலூர் ஆண்டவருக்குப் பணிவாகக் கடிதத்தின் வாயிலாகத் தெரிவித்தார்.

கோவிலூரில் வாசம்

சின்னத் துறவாண்டவர் காசிக்குச் சென்றதும் பெரிய துறவாண்டவர் கோவிலூருக்குத் திரும்பி வந்து ஞானகுருவை வணங்கி, இறையன்பில் ஈடுபட்டு ஞான குருவின் ஆணைப்படி ஆப்தம், அங்கம் ஸ்தானம் சத்பாவம் என்னும் நான்கு பணிகளும் செய்து, வந்தவர்கட்கு அன்னமும் ஆடைகளும் வழங்கி, உபதேசங்கள் புரிந்து, கோவிற் பணிகளும் செய்து 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற நெறியில் ஒழுகினார். அவர் 'சொல் வன்மையில் ஆதிசேடனையும், கற்பிப்பதில் வசிஷ்டரையும் அறிவில் ஜனகரையும், கருணையில் ஜடபரதரையும் துறவில் சுகப் பிர்மத்தையும்' பக்தியில் நாரதரையும் ஒத்துக் கொற்ற வாளீசர், ஸ்ரீ திருநெல்லை அம்மை அருளால் பெற்றுத் திகழ்ந்தார்.

பின் கைவல்ய நவநீதத்திற்குப் பதசாரம் என்ற உரை இயற்றினர். இந்நூலுக்குப் பதின்மர் உரை எழுதியுள்ளனர், அவற்றில் எல்லாம் இவரது உரையே முதன்மையானது. உலகநாத சுவாமிகளைக் கொண்டு "சமிவன க்ஷேத்திர மான்மியம்" "விவேக சூடாமணி" "ஜீவன் முக்தி விவேகம்" "சூதசம்ஹிதை முக்தி கண்டம்" "சூதகீதை" "ரிபுகீதை" முதலிய சாஸ்திரங்களைத் தமிழில் மொழிபெயர்க்கச் செய்தார்.

கோவிலூர் ஆதீனத்தின் முதல்வராகிய ஸ்ரீலஸ்ரீ முத்துராமலிங்க ஆண்டவர் தம் இறுதி நாளில், ஸ்ரீலஸ்ரீ

துறவாண்டவரை நோக்கி, "அருணாசலம், நீ இன்று முதல் இம்மடாலயத்திலிருந்து அடியார்களுக்கு அருள்புரிந்து வருவாயாக" என்றார். கலி 4948 சாலிவாகன சகாப்தம் 1769 பிலவங்க ஆண்டு உத்தராயணம் பங்குனித் திங்கள் 28ஆம் நாள் ஸ்ரீலஸ்ரீ முத்துராமலிங்க ஆண்டவர் சிவபதம் எய்தினார். அன்னார் மறைவுக்குப் பின் கி.பி. 1847இல் ஸ்ரீலஸ்ரீ துறவாண்டவர் தமது 32வது வயதில் கலி 4948க்குப் பிலவங்க ஆண்டு பங்குனித் திங்கள் 8ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை கோவிலூர் ஆதீனத்தின் இரண்டாவது மடாதிபதி என்ற புகழுக்கு உரியவரானார். பல சாதனைகள் நிகழ்த்தலானார். கோவிலூர் மடத்திற்கு வந்து வேதாந்த நூல்களை ஓதி உணரும் அடியவர்களின் உணவு முதலிய வசதிகளின் பொருட்டுக் களத்தூர் என்னும் கிராமம் ஒன்றை மடத்துக்குக் தேடி வைத்தார். நித்தியானந்த சுவாமிகள், சுப்பராய சுவாமிகள் முதலிய பலர் சுவாமிகளைக் குருவாக அடைந்து அருளுரை பெற்றனர். இவர்களுள் நித்தியானந்த சுவாமிகள் வடமொழி தென்மொழிகளில் வல்லுநராய்ப் பஞ்சதசி முதலிய நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தார்.

மறைவு

ஸ்ரீலஸ்ரீ முத்துராமலிங்க ஆண்டவர் மறைந்து பதினேழாவது மாதம் கலியுகம் 1950, சாலிவாகன சகாப்தம் 1771 (கி.பி. 1849) சௌமிய ஆண்டு தட்சிணாயனம் கிரீஷ்மருது ஆடி மாதம் சுக்கிலபட்சம் பானுவாரம் சதுர்த்தசி திதி பூர நட்சத்திரம் மிதுன லக்கினம் என்னும் இவைகள் கூடிய நன்னாளில் ஸ்ரீலஸ்ரீ துறவாண்டவர் சிவபதவி அடைந்தார். உடனே கருணாநிதி அவர்கள் பெரியோர்களையும் அடியார்களையும் வரவழைத்து, மண்டலா பிஷேகம் முதலியவற்றைச் சிறப்பாய் நடத்தினார். கோவிலூர் மடத்தில் ஸ்ரீலஸ்ரீ முத்துராமலிங்க ஆண்டவர் லிங்க வடிவமாயும், ஸ்ரீலஸ்ரீ துறவாண்டவர் நந்தி வடிவமாயும் வீற்றிருக்கின்றனர்.

ஸ்ரீலஸ்ரீ துறவாண்டவர் மீது மதுரைச் சுப்பராய சுவாமிகள் என்பவரால் ஸ்ரீலஸ்ரீ அருணாசல ஞானதேசிக ரத்னப்பிள்ளைத் தமிழ் சொற்சுவை, பொருட்சுவை நிறையப் பாடப்பெற்று வெளியிடப் பெற்றுள்ளது. ○○○

2

கோவிலூர் ஆதீனம்
ஸ்ரீலஸ்ரீ கருணாநிதி சுவாமிகள்
[மூன்றாவது பட்டம்]



ஸ்ரீ ல ஸ்ரீ சிதம்பர ஞான தேசிகர் சுவாமிகள் (மூன்றாவது பட்டம்)
(1849 - 1876)

ஸ்ரீலஸ்ரீ துறவாண்டவர் மறைவுக்குப் பின்னர் மூன்றாவது மடாதிபதி என்னும் பேறு பெற்றவர் ஸ்ரீலஸ்ரீ கருணாநிதி சுவாமிகள் ஆவார். அன்னார் ஸ்ரீலஸ்ரீ துறவாண்டவர் அவர்களின் உடன் பிறந்த தம்பியாவார். அவர் ஒரு முறை கோவிலூருக்கு ஸ்ரீலஸ்ரீ துறவாண்டவ சுவாமிகளைக் காணச் செல்ல விரும்பினார். உடனே தன் தாயிடம் சென்று அதற்கு அனுமதி கேட்டார்.


அதற்கு அவர்கள், "கோவிலூருக்குச் சென்ற எருமை மாடு கூடத் திரும்பாதே. நீ எங்கே திரும்பப் போகிறாய்?" என்றார்களாம். தவறாது திரும்பி வருவதாகக் கூறிவிட்டுக் கோவிலூருக்குச் சென்ற கருணாநிதி பிறகு திரும்பவில்லை. கோவிலூரில் அவர்

ஸ்ரீலஸ்ரீ முத்துராமலிங்க ஆண்டவரைச் சரணடைந்து அருள் பெற்றார். சில நாள் கோவிலூரில் தங்கியிருந்து பின் திருப்பெருந்துறைக்குச் சென்று வடக்கு மடத்தில் தியான சமாதிகளைச் செய்து கொண்டிருந்தார்.

இதனைக் கேட்டதும் ஸ்ரீலஸ்ரீ துறவாண்டவர் குறுந்திரட்டு, பெருந்திரட்டு முதலிய சாஸ்திரங்களினின்றும் ஐம்பது செய்யுள் எடுத்துத் திரட்டிச் "சீடாசாரம்" எனப் பெயரிட்டு, ஒரு கடிதமும் எழுதித் திருப்பெருந்துறைக்கு அனுப்பினார். அதனைக் கண்ட கருணாநிதி மனம் நெகிழ்ந்து, உடனே புறப்பட்டு கோவிலூருக்கு வந்து ஸ்ரீலஸ்ரீ முத்துராமலிங்க ஆண்டவருக்கு அடியார்க் கடியாராய் நடந்து வந்தார். பிறகு ஸ்ரீ ஆண்டவர் விருப்பப்படியும், துறவாண்டவர் ஆணைப்படியும் மூன்றாவது மடாதிபதி ஆனார். ஆண்டவரை மகாலிங்க மூர்த்தியாகவும், துறவாண்டவரை நந்திகேஸ்வரராகவும் சமாதியிடத்தில் அமைத்து, இருவருக்கும் ஒன்றாய்க் கர்ப்பக்கிரகம் முதலியன அமைத்துக் கும்பாபிஷேகம் முதலியன செய்து நித்திய பூஜைகளுக்கு ஆவன செய்தார்.

OOO

3



கோவிலூர் ஆதீனம்
ஸ்ரீலஸ்ரீ மகாதேவ ஞான சுவாமிகள்
[7ஆம் பட்டம்] (1919-1946)

மாட்சிமை மிகுந்த தனவணிகர் குலத்தில், மாத்தூர்க் கோவில் கருப்பூர்ப் பிரிவு கோத்திரத்தில், சுப்பிரமணியம் செட்டியார் என்னும் திருநாமமுடைய செல்வர் வாழ்ந்திருந்தார். இவர் கல்வியறிவிலும், நல்லொழுக்கத்திலும், ஈஸ்வர பக்தியிலும் சிறந்து விளங்கி வந்தார். இவருக்கு வாழ்க்கைத் துணைவியாக அமைந்த மாது நல்லாளின் பெயர் சிட்டாளாச்சி என்பதாம். இவ்வம்மையார் "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற, சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்னுந் திருக்குறளுக்கோர் இலக்கியமாக அமைந்து நின்று, கணவருடன் இல்வாழ்க்கையை இனிது நடத்தியிருந்தார். இத்தம்பதிகளாகிய சுப்பிரமணியஞ் செட்டியாரும் சிட்டாளாச்சியாரும், தங்கட்கு இகச்செல்வத்திற்கு வேண்டிய

செல்வமிருந்தும், சுகச் செல்வமாகிய மகச் செல்வமின்மையின் மனம் மிக நொந்து, நன்மக்கட்பேற்றை வேண்டி தாம் வழிபடு கடவுளாகிய திருஅண்ணாமலையாரை இடைவிடாது போற்றிப் பணிந்து வணங்கி வந்தனர்.

சுவாமிகள் தோற்றம்

சுப்பிரமணியஞ் செட்டியாரும் சிட்டாளாச்சியாரும் மிகுந்த பக்தியுடன் வேண்டிய வேண்டுகோளுக்குத் திருஅண்ணாமலை இறைவன் திருவுளமிரங்கி மகன் பிறக்க அனுக்கிரகம் செய்தருளினர். அவ்வனுக்கிரக வலியால், கருவிலே திருவுடைய நம் மகா தேவஞானதேசிக சுவாமிகள், குழந்தையாக இவ்வுலகில் தோன்றியருளினார்கள். இவ்வாறு தோன்றிய காலம் கலியுகரதி வருஷம் 4984க்குச் சரியான சித்திரபானு வருஷம், சித்திரை மாதம் 4ஆம் தேதி (ஆங்கிலம் 1882ஆம் வருஷம், ஏப்ரல் மாதம் 15ஆம் தேதி) சனிக்கிழமை, கிருஷ்ணபட்சம், துவாதசி திதி, பூரட்டாதி நக்ஷத்திரம் கூடிய சுபநாளில் உதயாதி நாழிகை 2இல் பொருந்திய சிம்ம லக்கின சுபகாலமாகும்.

பிள்ளைத் திருநாமம்

தாய் தந்தையர்கள் தம் அருமைப் புதல்வர்க்குத் திருஅண்ணாமலை இறைவனின் திருவருளால் தோன்றிய காரணத்தால் "அண்ணாமலை" எனப் பிள்ளைத் திருநாமம் சூட்டி வளர்த்து வந்தனர்.

கல்வி

சுவாமிகள் வளர்ந்து ஐந்து வயதையடைந்தார்கள். அப்போது தாய் தந்தையர்கள் தம்புதல்வராகிய நம் சுவாமிகட்குக் கல்விப் பயிற்சி செய்விக்க விரும்பி, நன்னாளில் நல்லோரையில் நல்லாசிரியரிடம் கல்வி கற்பிக்கத் தொடங்கும் விழாவைச் சிறப்புறச் செய்து, கல்வி கற்கச் செய்தனர். சுவாமிகள் பதினைந்து வயதளவில் எல்லாக் கல்விகளையும் நன்கு கற்றுத் தேர்ச்சியடைந்தனர்.

திரவியந்தேடல்

"திரைகடலோடியுந் திரவியந்தேடு" என்பது ஔவைப்பிராட்டியார் அருள்மொழி. இதன் பொருள்,

"அலைவீசுங் கடலைத் தாண்டிச் சென்றும் பொருளைத் தேடுவாயாக" என்பதாம். இத்தகைய அருள்வாக்குக்கும், தம் குலமரபுக்கும் இணங்கத் தந்தையாராகிய சுப்பிரமணியஞ் செட்டியார், தம்முடைய புதல்வர் திரைகடலோடியுந் திரவியந் தேட வேண்டுமென்று எண்ணினார். அவ்வெண்ணப்படியே தம் புதல்வராகிய நம் சுவாமிகளைக் கடல் கடந்து வாணிகத்திற்குச் செல்லும் சில தனவணிகப் பெருமக்களுடன் கூட்டியனுப்பினார். சுவாமிகளும் அவ்வாறே சென்று சில ஆண்டுகள் அங்குத் தங்கிப் பெரும் பொருள் தேடிக் கொண்டு திரும்பி வந்தனர்.

சிவஞான வேட்கை

நம் சுவாமிகள் சிவானுக்கிரகத்தாற் பிறந்தமையின் சிவஞானத்தை அடைய வேண்டுமென்ற இச்சை இயற்கையாகவே அமைந்து நாள்தோறும் பெருகலாயிற்று.

திருமணம்

சுப்பிரமணியஞ் செட்டியாரும் அவருடைய தர்மபத்தினியாரும் தம் புதல்வர்க்குத் திருமணம் செய்விக்கத் தகுந்த வயது வந்ததையறிந்து, திருமணம் செய்விக்க விரும்பித் தம் கருத்தைப் புதல்வரிடம் தெரிவித்தனர். அதற்கு நம் சுவாமிகள் தமக்குத் திருமணம் வேண்டாம் என்று அன்புடன் அறிவித்தனர். இவ்வாறு அறிவித்ததற்குக் காரணம் சிவஞானத்தையடைய வேண்டுமென்ற இச்சை அதிகமாக வளர்ந்து கொண்டிருந்ததேயாம்.

இவ்வாறு நம் சுவாமிகள் அறிவித்ததை அறிந்த தந்தையார் கவலையுற்றுத் தம் புதல்வரிடம், முன்னோர் காலத்திலிருந்து தொடர்ந்து வளர்ந்து வந்த நம் குலமரபு நின்னோடு முடிவுறல் சரியன்று. ஆகையால் திருமணம் செய்து கொண்டு இல்லறத்தை நல்லறமாக நடைபெறச் செய்ய வேண்டுமென்று மிகவும் வற்புறுத்திக் கூறினார். அவ்வற்புறுத்தலினால் தந்தையாரின் கவலையை அறிந்து, அக்கவலை நீங்க வேண்டுமெனவும், தந்தை மொழியை வேதமொழியாகக் கருத வேண்டுமென்ற ஆன்றோர் வாக்கியத்திற்கிணங்க நடந்து கொள்வது

அறச்செயலேயாகுமெனவும் நினைந்து, ஒருவாறு உடன்படலானார்.அதன் பின்பு தந்தையார், அருந்ததியைப் போன்ற கற்பிற் சிறந்த அலமேலு ஆச்சி என்னும் பெயருடைய மாதுநல்லாளை, நன்முகூர்த்தத்தில் சிறப்புறத் திருமணம் செய்து வைத்தனர்.

தாய் தந்தையர் மறைவு

பின்பு சில காலஞ்சென்று தாயுந் தந்தையும் முன்பின்னாகச் சிவபதம் அடைந்தார்கள். அன்னார்கட்குச் செய்ய வேண்டிய செய்கடன்கள் அனைத்தையும் நம் சுவாமிகள் சிறப்புறச் செய்து முடித்தனர்.

இல்லறம் இயற்றல்

அதன் பின் அலமேலு ஆச்சியாருடன் வசிட்டர் முதலிய முனிவர்களைப் போன்று பற்றற்ற முறையில் இல்லறத் தருமத்தைச் சிறப்புற நடத்தி வந்தனர். அவர்கட்கு அண்ணா மலை என்ற ஒரு புத்திரரும், திருநெல்லை என்ற ஒரு புத்திரியும் பிறந்தனர்.

தந்தையாருக்கும் புத்திரருக்கும் வழிபடு கடவுளின் பெயராகிய "அண்ணாமலை" என்ற ஒரே பெயர் அமைக்க நேர்ந்துவிட்டதால், புத்திரருக்கு அண்ணாமலை என்ற பெயரோடு துணைப்பெயராகக் "காசி" என்ற இரண்டாவது பெயரும் வைத்து வழங்கினர்.

சிவஞான வேட்கை மிகுதல்

அதன் பின் தனது தந்தையாரின் ஆணைப்படி இல்லறமியற்றல் முடிவு பெற்றது என்று திருவுளத்தில் கருதினார். முன்னே எண்ணியபடி சிவானுபூதி ஞானத்தையடைந்து, சர்வதுக்க நிவிர்த்தி பரமானந்தப் பிராப்தி வடிவ வீட்டின்பத்தைப் பெறவேண்டுமென்ற இச்சை தீவிரமாக வளர்ந்து, சிவஞான சாதனங்களான, நித்தியா நித்தியவஸ்து விவேகம், இகாமுத்திரார்த்த பல போகவிராகம் சமாதி சட்க சம்பத்தி, முமுட்சுத்துவம் என்னும் நான்கு சாதனங்களையும் அடைந்தார்.

துறவும், குருவை அடைதலும்

அதன் பின்,

"ஆனபின் மனைவி மக்கள் அர்த்த ஏ டணைகள் மூன்றில்
கானவர் வலையிற் பட்டுக் கைதப்பி ஓடும் மான்போல்
போனவன் வெறுங்கையோடே போகாத வண்ணஞ் சென்று
ஞானசற் குருவைக் கண்டு நன்றாக வணங்கினானே"

என்று கைவல்ய நவநீத நூல் கூறுகின்ற விதியின்படி இல்லறத்தை விட்டுத் துறந்து, அதிவிரைவாக மகத்துவம் மிகுந்த வேதாந்த ஞானகுருபரம்பரை அருளாட்சி புரியும் க்ஷமிவன க்ஷேத்திரமென்னும் கோவிலூர் மடாலயத்தையடைந்து, அங்குள்ள பெரியோரின் துணைகொண்டு, அப்போது அங்கு ஐந்தாவது குருமூர்த்தமாக எழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ - வீரசேகர ஞான தேசிக சுவாமிகளைக் கண்டு வணங்கித் துதித்து நின்றனர்.

குருதீக்ஷையும், தீக்ஷா நாமமும்

குருநாதராகிய ஸ்ரீலஸ்ரீ - வீரசேகர ஞானதேசிக சுவாமிகள், தமக்கு முன்பு வணங்கித் துதித்து நின்ற அன்பரின் மிகுதியான பக்தி சிரத்தையை அறிந்து, அவரை அன்புடன் நோக்கி, "நீ யார்? இங்கு யாது கருதி வந்தனை?" என வினாவினர்.

அவ்வினாவிற்கு விடையாக, அன்பர் "அடியேன் தேவகோட்டை என்னும் ஊரில் தோன்றிய வைசியச் சிறுவன்; அளவிலாத் துன்புடைய பிறவிக் கடலில் ஆழ்ந்து மிகவும் சோகத்தையடைந்தேன்; ஆதலால் அத்துன்பக் கடலினின்றும் கரையேற அனுக்கிரகஞ் செய்ய வேண்டும்" என்று பணிவுடன் விண்ணப்பஞ் செய்து கொண்டனர்.

இவ்வாறு விண்ணப்பஞ் செய்து கொண்டதை அறிந்த ஸ்ரீலஸ்ரீ வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் மேலான சச்சிதானந்த வடிவ பிரம்ம ஞானத்தை அடைவதற்குரிய சாதனங்கள் அனைத்தும் உடைய ஞான அதிகாரம் (ஞானத்திற்கு உரிய தகுதி) அன்பரிடம் அமைந்திருப் பதையறிந்து,

"அன்னதன் சிசுவை ஐயன் ஆமைமீன் பறவை போலத்
தன்னகங் கருதி நோக்கித் தடவிச்சந் நிதியி ருத்தி"

என்று கைவல்ய நவநீத நூலில் கூறி யிருப்பது போல, அனைத்து தீக்ஷைகளையும் செய்து[1] பூர்வாசிரமத்தில் வைத்திருந்த அண்ணாமலை என்ற நாமத்தை மாற்றி[2] "மகாதேவ சுவாமி" என்ற தீக்ஷாகால நாமத்தை வழங்கி இருக்கச் செய்தனர்.

குருபணி செய்தல்

அதன் பின் தமது குருமூர்த்தியாகிய ஸ்ரீலஸ்ரீ வீரமாமுனிவரிடத்தில் மிகுந்த பக்தி சிரத்தையுடன் 1. ஆத்தம் (அதாவது ஆப்தம்- குருநாதனுக்கு அனுகூலமான பணிவிடைகளைச் செய்தல்), 2. அங்கம் (அதாவது குரு நாதனுக்குக் கால் கழுவுதல், துணி தோய்த்தல் முதலிய குற்றேவலைச் செய்தல்) 3. தானம் (அதாவது ஸ்தானம்-குரு நாதனுக்குரிய மடம் நிலம் முதலியவற்றைப் பாதுகாத்தல்) 4. சத்பாவம் (அதாவது குரு நாதனே பிரத்திய க்ஷமாகக் கண்ட பரமசிவம் என்று நம்புதல்), என்னும் நான்கு விதமான எல்லாப் பணி விடைகளையும் (தம் குரு நாதனுக்கு) மிகவும் அன்பு உண்டாகும்படி சிறப்பாகச் செய்து கொண்டிருந்தனர்.

---

1 தீக்ஷை என்பது தீக்கை எனவும் வழங்கப் பெறும், தீக்கை என்பதன் பொருள், குருவானவர் சீடர்களின் மும்மலங்களாகிய, தீவினையென்னும் பாபகன்மம், விக்ஷேபம் என்னும் சித்தசஞ்சவம், ஆவரணம் என்னும் அஞ்ஞானம் ஆகிய மூன்றையும் தீயச்செய்து, அவர்களின் மனத்தை அவர்களது யதார்த்த சொரூபமாகிய சச்சிதானந்த ஆன்மப்பிரம்ம சொரூபத்தில் செலுத்துதல் என்பதாம். இத்தகைய தீக்கை நான்குவிதமாம். அவை: 1. மானசததீக்கை, 2. சட்சுதீக்கை, 3. பரிசதீக்கை, 4. வாசகதீக்கை என்பனவாம். அவற்றுள் முதல் மூன்றின் விளக்கங்கள் மேலே கூறப் பெற்றன. நான்காவதாகிய வாசகதீக்கை என்பது, சீடன் அஞ்ஞானம் முற்றும் ஒழிந்து, திட அபரோக்ஷய்வக்ஷாத்கார ஞானம் அடைந்து, தனது யதார்த்த சொரூபமாகிய ஆத்மப்பிரம்ம சொரூபமாக நிலைப்பதாகிய, சர்வதுக்க நிவிர்த்தி பரமானந்தப் பிராப்தி வடிவமோக்ஷத்தையடையும் படி குருவானவர் தமது வாக்கினால் மகாவாக்கியார்த்த உபதேசம் கூறுதலாம்.

2 "ஸ்ரீலஸ்ரீ மகாதேவஞான தேசிக சுவாமிகள்" என்னும் நாமம் முதலில் திருவண்ணாமலை ஈசானிய மடாலயத்தில் குருமூர்த்தமாக எழுந்தருளிய காலத்தில் ஏற்பட்டதாகும்.

16 நூல்களை உபதேசமாகக் கேட்டல்

ஸ்ரீலஸ்ரீ வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் வாசக தீக்ஷையாகிய, வேதாந்த மகா வாக்கியார்த்தம் கூறும் 16 நூல்களை உபதேசப் பாடமாகக் கூறுதலும், மகாதேவ சுவாமிகள் அவற்றைச் சிரத்தையுடன் கேட்டுத் தாரணை செய்தலும்

பின்பு ஸ்ரீலஸ்ரீ வீரசேகர ஞான தேசிக சுவாமிகள் மகாதேவ சுவாமிகளிடத்தில் மிகவும் அன்பு கொண்டு, ஆங்குள்ள மரபின் முறைப்படி வேதாந்த நூல்களாகிய 1. நாநா ஜீவ வாதக் கட்டளை, 2. கீதாசாரத் தாலாட்டு, 3. சசிவன்னபோதம், 4. மகாராஜா துறவு, 5. வைராக்கிய சதகம், 6. வைராக்கிய தீபம், 7. இலக்ஷணாவிருத்தி, 8. அஞ்ஞவதைப் பரணி, 9. விவேக சூடாமணி, 10. வேதாந்த சூடாமணி, 11. கைவல்ய நவநீதம், 12. பஞ்சதசி, 13. ஈசுர கீதை, 14. பகவத்கீதை, 15. பிரம்மகீதை, 16. ஞானவாசிட்டம் என்னும் பதினாறு நூல்களையும் இனிய கருணையுடன் உரிய காலங்களில் முறையாகப் போதித் தருளினர். மகாதேவ சுவாமிகள் மிகவும் சிரத்தையுடன் மேற்கூறிய பதினாறு நூல்களையும் பாடங்கேட்டுத் தாரணை செய்தனர்.

இரண்டாம் முறை பாடங்கேட்டல்

கோவிலூர் குருமரபின் முறைப்படி முதல் பாடம் ஒவ்வொன்றிற்கும் இரண்டாம் பாடம் கேட்க வேண்டும் என்ற சம்பிரதாயப் படி, மேற்படி கோவிலூர் வேதாந்த மடத்தில் பின்னாளில் 6-வது குருமூர்த்தமாக எழுந்தருளி யிருந்த ஸ்ரீலஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகளிடத்தில் முறையாக அந்தப் பதினாறு நூல்களையும் இரண்டாம் பாடமும் கேட்டு பூர்த்தி செய்தனர்.

ஞானவாசிட்டம் ஏடுவாங்குதல்

பின்பு கோவிலூர் குருமரபின் வழக்கத்தின்படி, வாசிட்டம் ஏடுவாங்கும் விழாவை ஆரம்பித்து, தமது குருமூர்த்தியாகிய ஸ்ரீலஸ்ரீ வீரசேகரஞான தேசிக சுவாமிகளை உயர்ந்த பீடத்தில் அமரும்படி வேண்டி, அவர்கள் அமர்ந்த பின் அவர்களது திருப்பாதங்களுக்குப் பஞ்சாமிர்தம், நெய்,

பால், தயிர், தேன், பழச்சாறு, இளநீர், சந்தனம், பன்னீர், விபூதி, கும்பதீர்த்தம் ஆகியவைகளை அபிஷேகஞ் செய்து, நீர் துவட்டி, அவர்களது திருமேனியில் புஷ்ப மாலைகள், பட்டு முதலியவைகளைச் சாத்தி அலங்காரஞ் செய்து, தூப, தீப, நைவேத்தியம், கற்பூர தீபம் அர்ச்சனை ஆகிய வைகளால் ஆராதனை செய்வதாகிய பூசனைகள் புரிந்து, குரு ஸ்தோத்திரங்களால் துதிகள் புரிந்த பின், குரு மூர்த்தியாகிய அவர்களது முன்னிலையில் வைத்த ஞான வாசிட்ட நூலை அவர்களது திருக்கரங்களால் எடுத்து ஆசீர்வாதஞ் செய்து கொடுக்கத் தாம் பக்தி சிரத்தையுடன் பெற்றுக் கொண்டனர். மாணாக்கர்கள் ஏடு வாங்குவது என்பது, வேதாந்தத்தை முழுமையாக உணர்ந்ததற்கு அறிகுறியாகும் மற்றும் வாசிட்டம் வரைக்கும் பாடங்கேட்டு முடிவு செய்த பின் மாணாக்கர் தம் குருமூர்த்திக்கு ஆராதனை செய்து மரியாதையுடன் நன்றியறிவிக்கும் விழாவும் ஆகும்.

தமது குருமூர்த்தியாகிய ஸ்ரீலஸ்ரீ வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் செய்யும் திருப் பணிகளுக்கு அனுகூலமான பணிகளைத் தாம் செய்து கொண்டிருத்தல்

அப்போது ஸ்ரீலஸ்ரீ வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் அவர்கள் கோவிலூர் மடாலயம், ஸ்ரீ திருநெல்லையம்பாள் சமேதஸ்ரீ கொற்றவாளீஸ்வரர் ஆலயம் முதலியவற்றின் சிறப்புத் திருப்பணிகளையும் கும்பாபிஷேகத்தையும் செய்து, பிரம்மோற்சவங்களையும் நடத்திக் கொண்டிருந்தனர். பின்பு திருக்களர் ஸ்ரீ அமிர்த வல்லியம்பாள் சமேத ஸ்ரீபாரி ஜாதவனேஸ்வரர் ஆலயத்தின் சீரமைப்புத் திருப்பணியையும் கும்பாபிஷேகத்தையும் சிறப்புடன் செய்து முடித்து, பிரம்மோற்சவத்தை நடத்த ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தனர். அத்தகைய திருப்பணிகள், கும்பாபிஷேகங்கள், உற்சவங்கள் முதலியவை நடைபெறச் செய்யும் பணிகளுக்கு அனுகூலமான பல பணிகளை யும், ஸ்ரீலஸ்ரீ மகாதேவ ஞானதேசிக சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகளுடனும், மற்றும் பல அடியார்கள் அன்பர்களுடனும் சேர்ந்து, பக்தி சிரத்தையுடன் செய்து கொண்டு தமது குருமூர்த்தியின் ஆசி பெற்றிருந்தனர்.

ஸ்ரீலஸ்ரீ வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் விதேகமுக்தி

ஸ்ரீலஸ்ரீ வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் முன்கூறியபடி திருக்களர் ஆலயத்தின் சீரமைப்புத் திருப்பணியையும் கும்பாபிஷேகத்தையும் சிறப்புடன் செய்து முடித்து, வைகாசி விசாக நக்ஷத்திர நாளில் பிரம்மோற்சவ ரதோற்சவத்தைச் சிறந்த ஏற்பாடுகளுடன் நடத்தினர். அவ்வாறு பிரம்மோற் சவம் நடைபெற்ற பத்தாம் நாள் (ரதோற்சவம் நடைபெறும்போது), தமது அறுபத்து மூன்றாவது வயது நிறைவுறுவதாகிய, விரோதி கிருது வருஷம், வைகாசி மாதம் 27ஆம் நாள் (ஆங்கிலம் 1911ஆம் வருஷம் ஜுன் மாதம் 8ஆம் நாள்) தெற்கு வீதியில் நடராஜப் பெருமான் சன்னிதியும் பிரம்மதீர்த்தக் கரையும் ஆகிய முக்தி ஸ்தானத்தில் ஸ்ரீபாரிஜாத வனேசரின் திருத்தேரின் முன்நின்று ஆனந்த நிருத்தனத்துடன், "மகாதேவா" என்ற மந்திரத்தைப் பலமுறை உச்சரித்துத் தமது ஜீவன் முத்தி நிலையை நீத்து, விதேகமுக்தியை யடைந்து பரிபூரண சச்சிதானந்த சிவ வடிவமாக நிலைத்தனர்.

ஸ்ரீலஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகள் கோவிலூர் மடாலயத்தில் ஆறாம் பட்டமுடைய குருபீடாதிபதியாக அமர்தல்

பின்பு ஸ்ரீலஸ்ரீ அண்ணாமலை ஞான தேசிக சுவாமிகள் ஆறாம் பட்டமுடைய குருபீடாதிபதியாக, ஸ்ரீலஸ்ரீ வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் விதேக முக்தியடைந்த காலத்திற்குப் பிற்காலம் முதல் அமர்ந்து மடாலய பரிபாலன காரியங்கள் அனைத்தையும் சிறப்புறச் செய்து கொண்டிருந்தார்கள். அக் காலத்தில் பின்னாளில் எட்டாம் பட்டம் ஏற்ற ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானதேசிக சுவாமிகள், புனவாசல் மகேஸ்வரானந்த சுவாமிகள், புனவாசல் கணபதி சுவாமிகள், திருக்களர் சண்முக சுவாமிகள், குச்சனூர் ஆறுமுக சுவாமிகள், துறையூர் பெருமாள் சுவாமிகள் முதலிய பல சாதுக்கள் வந்து அவர்களது சன்னிதியில் சரணாகதியடைந்தனர். அவர்கட்கு நாநாஜீவவாதக் கட்டளை முதல் ஞான வாசிட்டம் வரையுள்ள வேதாந்த சாத்திர உபதேச பாடங்களை முறைப்படி நடத்தி, ஞானவாசிட்ட பாடம் நிறைவு

பெற்றவர்கள், வாசிட்டம் ஏடு வாங்கும் விழாவையும் சிறப்புற நடைபெறச் செய்தார்கள்.

கோவிலூரில் 11 நாள் ஆடிப் பூரத் திருவிழா நடந்த போது, பேரவை (சதஸ்) கூட்டி காலை மாலை இருவேளையும், பல அறிஞர் களையும் கலைஞர்களையும் அழைத்துப் பங்கு பெறச் செய்து, அவர்கட்கு வேண்டிய உபசாரங்களை மிகவும் வழங்கி அறிவுரைகளை வழங்க செய்து, அறிவுப்பயிர் எங்கும் தழைக்க வழிசெய்தனர்.

ஸ்ரீலஸ்ரீ மகாதேவ ஞானதேசிக சுவாமிகள் திருவண்ணாமலை ஈசானிய மடாலயத்தின் குருபீடாதிபதியாதல்

பின்பு ஸ்ரீலஸ்ரீ அண்ணாமலை ஞான தேசிக சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ மகாதேவ ஞானதேசிக சுவாமிகளைத் திருவண்ணாமலை ஈசானிய மடாலயத்தின் குருமூர்த்தமாக அங்குள்ள ஆசார முறைப்படி நியமனஞ் செய்து, அதற்கு முன் ஸ்ரீ மகாதேவ சுவாமிகள் என்னும் நாமம் வழங்கி வந்ததை, அன்று முதல் ஸ்ரீலஸ்ரீ மகாதேவ ஞானதேசிக சுவாமிகள் என்ற நாமமாக அமைத்து வழங்கும்படி செய்து, அம்மடாலய பரிபாலனமும் வேதாந்த சாத்திர உபதேச பாடங்களும் நடத்தி வருமாறு அன்புடன் கூறி அமைத்தனர்.

ஸ்ரீலஸ்ரீ மகாதேவ ஞானதேசிக சுவாமிகள் தனித்திருந்து தியானஞ் செய்ய விருப்பமுள்ளவராய், மடாதிபதி பதவியை ஏற்க விருப்ப மில்லாதவராய் இருந்தும், ஸ்ரீலஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகளின் வற்புறுத் தலினால் சம்மதித்து அமர்ந்தனர்.

ஸ்ரீலஸ்ரீ மகாதேவ ஞானதேசிக சுவாமிகள் திருவண்ணாமலை ஈசானிய மடாலய பரிபாலனம் செய்தல்

ஸ்ரீலஸ்ரீ மகாதேவ ஞானதேசிக சுவாமிகள் திருவண்ணாமலை ஈசானிய மடாலயத்தில் குருமூர்த்தமாக எழுந்தருளியிருந்து சிறந்த முறையில் பரிபாலனம் செய்து கொண்டிருந்தார்கள். அப்போது, அங்கு தம்மை வந்து சரணாகதியடைந்த நடேச சுவாமிகள், வேலாயுத சுவாமிகள் முதலிய பல மாணாக்கர்களுக்கு வேதாந்த நூல்களாகிய நாநாஜீவவாதக் கட்டளை முதலிய முறையான

நூல்களை, உபதேச பாடமாகப் போதனை செய்து கொண்டிருந்தனர் மற்றும் ஸ்ரீலஸ்ரீ ஈசானிய ஞானதேசிகர் ஆலய பூஜையாதிகளையும் சிறப்புற நடைபெறச் செய்து கொண்டிருந்தனர்.

ஸ்ரீரமண சுவாமிகள் திருவண்ணாமலைக்கு வந்த ஆரம்ப காலத்தில் ஈசானிய மடாலயத்திறகு வருதலும் நமது சுவாமிகள் உபசரித்தலும்

மேற்கூறியவாறு ஈசானிய மடாலயப் பரிபாலனம் செய்து கொண்டிருந்த காலத்தில், திருவண்ணாமலையில் பிற்காலத்தில் பெரிய மகானாக விளங்கிக் கொண்டிருந்த பகவான் என்னும் ஸ்ரீலஸ்ரீ ரமணமகரிஷியவர்கள், திருவண்ணாமலைக்கு வந்த ஆரம்பகாலத்தில் அடிக்கடி ஈசானிய மடாலயத்திற்கு வந்து நமது குருமூர்த்தியாகிய ஸ்ரீலஸ்ரீ மகாதேவ ஞான தேசிக சுவாமிகளைச் சந்தித்து சிறிது நேரம் வேதாந்த ஞானவிஷயங்களைக் குறித்துச் சம்பாஷணைகள் செய்துவிட்டு, நமது சுவாமிகளின் உபசாரங்களைப் போற்றி அவ்விடமே கைப்பிச்சையும் ஏற்று உண்டு திருப்தியடைந்து செல்வார்கள்.

ரமண மகரிஷிகள் தியான நிஷ்டையில் ஈடுபட இடம் வேண்டிய நிலையில், நமது மகாதேவ சுவாமிகள், பூர்வாசிரமத்தில் தனது சகோதரியாக விளங்கிய விசாலாட்சி ஆச்சி அவர்களின் பொருளுதவியால், திருவண்ணா மலை குகை நமசிவாயர் ஆசிரமத்துக்கு மேற்கில் உள்ள கந்தாஸ்ரமத்தை அமைத்து கொடுத்தார்கள். இதுவிபரம் “எனது நினைவுகள்” என்ற ரமணாஸ்ரமம் குஞ்சு சுவாமிகளின் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கோவிலூர் மடாலயத்திற்கு வருதல்

திருவண்ணாமலை ஈசானிய மடாலய பரிபாலன நிகழ்ச்சிகள் இவ்வாறு இருக்க, கோவிலூர் மடாலயத்தில் ஆறாவது குரு மூர்த்தமாக எழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகள், தமக்குச் சீவன் முத்தித்தசை நீங்கி விதேக முத்தியடையும் தசை நெருங்கி வருவதை உணர்ந்து, திருவண்ணாமலை ஈசானிய

மடாலயத்திலிருந்த ஸ்ரீலஸ்ரீ மகாதேவஞான தேசிக சுவாமிகளை விரைவாக வரும்படி அழைப்பித்தார்கள். அவ்வழைப்பிற்கிணங்கி ஸ்ரீலஸ்ரீ மகாதேவ ஞானதேசிக சுவாமிகள் விரைவாகக் கோவிலூர் மடாலயத்திற்கு வந்து சேர்ந்து, ஸ்ரீலஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகளைத் தரிசனம் செய்தார்கள். அப்போது ஸ்ரீலஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ மகாதேவஞான தேசிக சுவாமிகளை நோக்கிக் கோவிலூர் மடாலயத்தின் குருஸ்தானத்தை இனிமேல் பரிபாலனம் செய்யத் தகுந்த சிறப்புக்கள் உள்ளவர் தங்களைத் தவிர இப்போது வேறொருவருமில்லை. ஆதலால் தாங்கள் குருஸ்தானத்தை ஏற்றுப் பரிபாலனஞ் செய்து வரவேண்டும் என்று வற்புறுத்திக் கூறினார்கள். அவ் வற்புறுத்தலை மறுக்க முடியாமல் ஏற்றுக் கொண்டனர்.

ஸ்ரீலஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகள் தமக்குப் பின் ஏழாம் பட்டத்தை ஏற்று இருக்கத் தக்க ஞானாசாரியரின் நியமன உறுதிமுறி (உயில் சாசனம்) ஏற்படுத்தல்

பின்பு கலியுகாதி வருஷம் 5020க்குச் சரியான சித்தார்த்தி வருஷம், சித்திரை மாதம் 28ஆம் நாள் (ஆங்கிலம் 1919ஆம் வருஷம், மே மாதம், 10ஆம் நாள்) சனிக்கிழமையன்று ஸ்ரீலஸ்ரீ மகாதேவ ஞானதேசிக சுவாமிகள் ஏழாவது குருமூர்த்தியாக இருக்கும் முறையில் உயில் சாசனம் எழுதி வைத்தனர்.

ஸ்ரீலஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகள் விதேகமுக்தி

பின்பு கலியுகாதி வருஷம் 5020க்குச் சரியான, சித்தார்த்தி வருஷம் வைகாசி மாதம், 8ஆம் நாள் (ஆங்கிலம் 1919ஆம் வருஷம், மே மாதம் 21ஆம் நாள்) புதன்கிழமை, கிருஷ்ண பக்ஷம், ஷஷ்டி, திதி, சிம்ம லக்கினம், திருவோண நக்ஷத்திரம் கூடிய சுப நாளில், பகல் ஒரு மணிக்கு ஸ்ரீலஸ்ரீ அண்ணாமலை ஞான தேசிக சுவாமிகள் தமது ஜீவன்முத்தித் தசையை நீத்து விதேக முக்தியை அடைந்து, பரிபூரண சச்சி தானந்த சிவ வடிவமாக நிலைத்தனர்.

ஸ்ரீலஸ்ரீ மகாதேவ ஞானதேசிக சுவாமிகள் கோவிலூர் மடாலயத்தில் ஏழாம் பட்டமுடைய குருபீடாதிபதியாக அமர்தல்

பின்பு ஸ்ரீலஸ்ரீ மகாதேவ ஞான தேசிக சுவாமிகள் 7ஆம் பட்டமுடைய குருபீடாதி பதியாக, ஸ்ரீலஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகள் விதேகமுக்தியடைந்த காலத்தின் பிற்காலம் முதல், அதாவது கலியுகாதி வருஷம் 5020க்குச் சரியான சித்தார்த்தி வருஷம், வைகாசி மாதம், 8ஆம் நாள் (ஆங்கிலம் 1919ஆம் வருஷம், மே மாதம், 21ஆம் நாள்) புதன்கிழமை பிற்பகல் முதல் அமர்ந்தருளினார்கள்.

வேதாந்த சாத்திர உபதேச பாடங்கள் நடத்தல்

அதன்பின் அன்று முன் இரவு சம்பிரதாய முறையில் நடைபெற வேண்டிய வேதாந்த சாத்திர பாடத்தை நடத்த ஆரம்பித்து, ஸ்ரீலஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகள் தம் காலத்தில் முறையாகப் பாடம் நடத்தி வந்து, வைராக்கிய சதகம் பாடம் நடத்துகையில் பாடம் நிறைவு பெறாமல் எஞ்சியிருந்த பாடத்தைப் பின்பு எட்டாம் பட்டம் ஏற்ற ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானதேசிக சுவாமிகள் முதலிய பல மாணாக்கர்கட்குச் சிறப்பாக உபதேசித்து, இரண்டாம் பாடம் ஸ்ரீலஸ்ரீ-வீர- கணபதி சுவாமிகளை நடத்தும்படி செய்து முடித்து, அதன் பின்பு நடைபெற வேண்டிய கிரமமான வாசிட்டம் வரையுள்ள நூல்களின் பாடங்களையும் சிறப்புற நடத்தி, வாசிட்டம் ஏடு வாங்கும் விழாவையும் சிறப்புற நடைபெறச் செய்தனர்.

ஸ்ரீலஸ்ரீ மகாதேவ ஞானதேசிக சுவாமிகளின் அருளாட்சி காலத்தில் மாணவர் தொகை மிகுதலும், வாசிட்ட ஏடு வழங்கும் விழாவின் எண்ணிக்கையும்

கோவிலூர் மடாலயத்தில் அதிகமான அடியார்கள் வசித்துப் பாடம் கேட்டு வந்தது ஐந்தாவது குருமூர்த்தமாகிய ஸ்ரீலஸ்ரீ வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் காலத்திலும், ஏழாவது குருமூர்த்தமாகிய ஸ்ரீலஸ்ரீ மகாதேவ ஞான தேசிக சுவாமிகள் காலத்திலும் தான் என்று சொல்லலாம். மேற்கூறிய ஏழாவது குருமூர்த்தியின் காலத்தில் அடியார்களின் தொகை கொஞ்சம் அதிகமாகவே இருந்ததாகவும் சொல்லலாம்.

மேற்கூறிய 16 நூல்களையும் கிரமமாகப் பாடம் கேட்டுப் பூர்த்தி செய்வதென்றால் சுமார் 12 ஆண்டுகள் ஆகலாம். 5ஆம் குரு மூர்த்தமாகிய ஸ்ரீலஸ்ரீ வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் ஏழுமுறை கிரமமாகப் பாடம் நடத்தி வாசிட்டம் வரை பூர்த்தி செய்து வாசிட்டம் ஏடு வழங்கும் விழாவைப் பூர்த்தி செய்திருக்கினறனர். 7ஆம் குருமூர்த்தமாகிய ஸ்ரீலஸ்ரீ மகாதேவஞான தேசிக சுவாமிகளும் மேற்கூறிய கிரமப்படி ஏழுமுறை கிரமமாகப் பாடம் நடத்தி வாசிட்டம் வரை பூர்த்தி செய்து வாசிட்டம் ஏடு வழங்கும் விழாவைப் பூர்த்தி செய்திருக்கின்றனர்.

ஸ்ரீலஸ்ரீ மகாதேவ ஞானதேசிக சுவாமிகளிடம் சந்நியாசம் பெற்ற நகரத்தார்களாகிய மாணாக்கர்கள்

1. தேவகோட்டை, ஜமீன்தார் சுவாமிகள் (காளையார்கோவில்)
2. கோனாபட்டு, சிவானந்த சுவாமிகள் (சிவா பழநியப்பா)
3. ஆத்தங்குடி, அருணாசல சுவாமிகள் (பில்லமங்கலம்)
4. கோட்டையூர், அழகப்ப சுவாமிகள் (கோவிலூர்)
5. பட்டமங்கலம், அடைக்கப்ப சுவாமிகள்
6. பள்ளத்தூர், முத்துவீரப்ப சுவாமிகள் (கோவிலூர்)
7. கீழப்பூங்குடி, சேவுக சுவாமிகள்
8. கீழப்பூங்குடி, (சுப-சேவு) சொக்கலிங்க சுவாமிகள்.

ஸ்ரீலஸ்ரீ மகாதேவஞான தேசிக சுவாமிகளின் கோவிலூர் மடாலயத்தின் பரிபாலனம்

கோவிலூர் மடாலயத்தில் செய்யத்தக்க சில சீர்திருத்தத் திருப்பணிகளையும், சில சிறப்புத் திருப்பணிகளையும் சிறப்புறச் செய்து முடித்தனர். கோவிலூர் மடாலயத்திற்குரிய சாணானேந்தல் என்னும் கிராமத்தில் பத்தாயிரம் ரூபாய் வரை செலவு செய்து மடம், நெற்களஞ்சியம் முதலிய பணிகளை இயற்றிக் கிராம வருமானம் மிகுதியாக வரும்படியான ஏற்பாடுகளையும் செய்து முடித்தனர். ஸ்ரீலஸ்ரீ ஆண்டவர் கோவில் பூஜை முதலியவைகளையும், வேதாந்த சாத்திர உபதேச பாடங்களையும், சாதுக்களின் பரிபாலனத்தையும்

யாவரும் போற்றும் வண்ணம் மிகவும் சிறப்பாக நடைபெறச் செய்து கொண்டிருந்தனர். ஆகார நேரங்களில் சாதுக்களும், நகரத்தார்களும், அனைவரும் உணவு அருந்தினார்களா? என்று மிகவும் கவனித்து விசாரித்து, அனைவரும் உணவு அருந்தும்படி ஏற்பாடு செய்வார்கள்.

நூல்கள் வெளியீடு செய்தல்

சிதம்பரம் ஸ்ரீலஸ்ரீ பொன்னம்பல ஞான தேசிக சுவாமிகளால் உரையியற்றப் பெற்ற கைவல்ய நவநீதம் ஆறாம் பதிப்பு நூலை 1941ஆம் ஆண்டில் சிதம்பரம் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர ஞானதேசிக சுவாமிகள் அச்சிட்டு வெளியிடும்படி செய்தார்கள். அத்வைத சாஸ்திர மான்மிய சங்கிரகம், கைவல்ய உபநிஷ தார்த்தம், திருவாசகம் சில பகுதிகள், பட்டினத்தார் பாடல் என்னும் சிறு நூல்களையும் அச்சிட்டு வெளியீடு செய்தார்கள்.

ஸ்ரீலஸ்ரீ மகாதேவ ஞானதேசிக சுவாமிகளின் விதேகமுக்தி

பின்பு ஸ்ரீலஸ்ரீ மகாதேவஞான தேசிக சுவாமிகள் யாவரும் போற்றத்தக்க சிறந்த முறையில் மடாலய பரிபாலனம் செய்து கொண்டிருந்து தமது 66ஆம் வயதில், கலியுகாதி வருஷம் 5049க்குச் சரியான சர்வ சித்து வருஷம், ஆனி மாதம், 12ஆம் நாள் (ஆங்கிலம் 1947ஆம் வருஷம், ஜூன் மாதம், 26ஆம் நாள்) குருவாரம், வளர்பிறை, நவமி திதி, அஸ்த நக்ஷத்திரம், வரியான்யோகம், பாலவ கரணம், சித்தயோகம் கூடிய சுபநாளில் துலாலக்கினம் கூடிய சுபவேளையாகிய பகல் 20.30 நாழிகையளவில் தமது ஜீவன் முக்தி நிலையை நீத்து, விதேக முக்தியையடைந்து, பரிபூரண சச்சிதானந்த சிவவடிவமாக நிலைத்தனர். அப்போது அங்கிருந்த பெரியோர்கள், மாணாக்கர்கள், நகரத்தார்கள் முதலிய அனைவரும் சுவாமிகளின் பிரிவு ஆற்றாமையால் வருந்தி இருந்தனர்.

ஸ்ரீலஸ்ரீ மகாதேவ ஞானதேசிக சுவாமிகள் கோவிலூர் மடாலய குருபீடாதிபதியாக இருந்த காலம் 28 வருஷம் ஒரு மாதமாகும்.

OOO

4

சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம், தேவகோட்டை

1916ஆம் ஆண்டில் வேத சிவாகம நெறி முறை விளங்குதற்கென சத்திரம் சோமசுந்தரம் செட்டியார், பெரிய மைனர் இராமநாதன் செட்டியார், ஜமீன்தார் அருணாசலம் செட்டியார், திருப்புனவாசல் சுப்பிரமணியஞ் செட்டியார் ஆகியோர் சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கத்தைத் தொடங்கினார்கள்.

அச்சங்கத்தில் வடமொழி, தென்மொழி சாத்திரப் பயிற்சிக்கென ஆசிரியர்கள் நியமிக்கப் பெற்றும், பல இடங்களில் இருந்த சிவாகமச் சுவடிகள், சாத்திரச் சுவடிகளை அரிதில் முயன்று பெற்று அச்சிட்டும் செய்தற்கரிய அரிய பணிகள் பல செய்யப் பெற்றன.

சங்கம் பதிப்பித்து வெளியிட்ட சில நூல்கள் - 1. சிவார்ச்சன சந்திரிகை (நாகரம்), 2. அஷ்டப் பிரகரணம் (நாகரம்), 3. சைவ பூஷணம் (மூலமும் தமிழ் முறையும்), 4. மாதங்க ஆகமம் - ஞானபாதம் (நாகரம்), 5. சம்பு பூஜாவிதி, 6. சைவ சித்தாந்த பரிபாஷை (நாகரம்), 7. உபமன்யு விலாசம் (கிரந்தம்).

1950க்குப் பின் சங்கப் பணி நின்று விட்டது. கடைசியில் பொறுப்பில் இருந்த திருநாவுக்கரசு செட்டியார் தத்புருஷ தேசிகரிடம் சங்கப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் படி கேட்டுக் கொண்டார்.

சங்கத்தில் வியாழக்கிழமை தோறும் சாத்திரப் பாடவகுப்பு நடத்துதலும், நூல்கள் வெளியிடுதலும் தத்புருஷ தேசிகரால் நிகழ்த்தப் பெற்றன.

ooo

5

சேக்கிழார் திருநாட்கழகம், தேவகோட்டை

இக்கழகம் தமிழ் வள்ளல் சேவு. மெய்யப்ப செட்டியாரைத் தலைவராகவும், பாலகவி இராமநாதன் செட்டியாரை அமைச்சராகவும், புலவர் கரு. இராம. சோம. இராமநாதன் செட்டியாரைச் செயலாளராகவும் கொண்டு 1947ல் தோற்றுவிக்கப் பெற்றது.

வைகாசி பூசத்தன்று சேக்கிழார் வழிபாடு, யானை வாகனத்தில் சேக்கிழார் பெருமான் திருவீதி உலா, மூன்று நாட்கள் சொற்பொழிவுகள் என ஆண்டுதோறும் சேக்கிழார் விழா நடைபெற்று வருகிறது.

தொடக்க விழாவில் சிவக்கவிமணி சி.கே.எஸ். தலைமை தாங்க பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார் தொடக்க உரை நிகழ்த்தினார். பின்னர் ஆண்டுதோறும் நடந்து வந்த விழாக்களில் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், அ.மு. சரவண முதலியார், கி.வா. ஜகந்நாதன், மு. வரதராசனார், ம. பாலசுப்பிரமணிய முதலியார், க. வச்சிரவேல் முதலியார், அருணை வடிவேல் முதலியார், நாகர்கோயில் ஆறுமுக நாவலர், சுந்தரமூர்த்தி ஓதுவார், அ.ச. ஞானசம்பந்தன் போன்றோர் விரிவுரை ஆற்றியிருக்கின்றனர்.

1972 வரை பாலகவி வாரந்தோறும் சொற்பொழிவு நிகழ்த்தி வந்திருக்கிறார்.

ooo

6

வன்றொண்டர் செட்டியார்

சேக்கிழார் விழா நடைபெறக் காரணமாக இருந்தவர் வன்றொண்டர் என்றழைக்கப்பட்ட நாராயணன் செட்டியார் ஆவார்.

நாராயணன் ஐந்து வீட்டார் மரபில் முத்துராமன் செட்டியார் மகனாகத் தோன்றினார். அம்மை நோயால் இளமையிலேயே கண் பார்வை இழந்தார். தமிழ் இலக்கண இலக்கியங்கள், சைவ சித்தாந்த நூல்களைக் கற்க வேண்டும் என்ற ஆசையால் இலங்கை நல்லூர் ஆறுமுக நாவலரிடம் சென்றார். இவரது உறுப்பு ஊனத்தைக் கருதி அவர் பாடம் சொல்ல மறுத்துவிட்டார். இவர் தமது முயற்சியில் தளராமல் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையை அணுகினார். அவர் இவரது ஆர்வத்தையும், முயற்சியையும் பாராட்டிப் பல்வேறு தமிழ் இலக்கிய இலக்கண, சைவ சித்தாந்த சாத்திர நூல்களைப் பாடம் சொன்னார். மிகுந்த நினைவாற்றல் கொண்ட வன்றொண்டர் ஒருமுறை கேட்டதைப் பின்னர் மறப்பதில்லை. பல்லாயிரம் பாடல்கள் அவருக்கு மனப்பாடம். இவரது நினைவாற்றலை உ.வே.சா. தமது வாழ்க்கை வரலாற்று நூலில் போற்றி எடுத்துரைக்கிறார்.

"நாராயண செட்டியார் நேத்திரம் இல்லாதவர். ஆனாலும் நுண்ணிய அறிவுடையவர். வேறொருவர் படிக்க அவர் பாடம் கேட்பார். அவருக்கு ஞாபக சக்தி அதிகம் உண்டு. பாடம் நடக்கையில் இவ்வளவு பாடல்களாயின. நிறுத்தலாமென்பார். பிள்ளையவர்களிடம் ஐயங்களை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு கேட்கும் பொழுது இன்ன படலத்தில் இன்ன செய்யுளின் இன்ன அடியென்று ஞாபகம் வைத்திருந்தே கேட்பார். அது யாவருக்கும் ஆச்சரியத்தைத் தரும்.

சிவநேசச் செல்வர்கள் பலர் கூடி அவருக்கு வன்றொண்டரென்றே பெயரிட்டு வழங்க வேண்டுமென்று சொன்னார்கள். பிள்ளையவர்கள் அங்கீகரித்து,

சித்திவாழ் வாமத்துச் சங்கரன்பொற் றாட்கமலப்
பத்தியாற் றேவார பாராய - ணத்தினால்
ளின்றோய் புகழ்மிகுந்த வன்றொண்ட
னென்னும் பேர் அழைத்து வரலானார்
சான்றோர் நினக்குத் தகும்

என்னும் பாடலைக் கூறி அன்று முதல் வன்றொண்டர் என்றே அழைத்து வரலானார்.

வேம்பத்தூர் பிச்சுவையர், சதாவதானம் சுப்பிரமணிய ஐயர், சொக்கலிங்க ஐயா, சிந்நயச் செட்டியார் ஆகியோர் வன்றொண்டரிடம் பாடம் கேட்டவர்களாவர். "சிவஞான போத லகு வசனம்" என்ற நூலை இவர் படைத்து உள்ளார்.

விநாயகர் கோயிலில் 108 முறை வலம் வந்து 108 முறை கீழே விழுந்து வணங்கும் பழக்கத்தை மேற்கொண்டு இருந்தார். இதை நேரில் கண்டறிந்த திருவாவடுதுறை ஆதீன கர்த்தர் மேலகரம் சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் இவரை வன்றொண்டர் என அழைத்துப் பாராட்டினார்.

திருத்தொண்டர் புராணத்தை ஆசிரியரிடம் பாடம் கேட்டு அத்தனை பாடல்களையும் நினைவில் கொண்டிருந்ததுடன் சேக்கிழார் பெருமானிடத்தும் வன்றொண்டர் எல்லையற்ற அன்பு கொண்டிருந்தார்.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையைக் கொண்டு சேக்கிழார் பெருமானுக்கு ஒரு பிள்ளைத்தமிழ் செய்து வாங்க வேண்டும் என்று எண்ணி அக்கருத்தை அவரிடம் தெரிவிக்க அவர் அதனை மகிழ்ந்து ஏற்று 1874 ஜூன் மாதத்தில் செட்டிநாட்டுக்கு வந்து சில மாதங்கள் தங்கிச் சேக்கிழார் பிள்ளைத் தமிழ், சூரை மாநகர்ப்புராணம், கோயிலூர்ப் புராணம், கண்டதேவி புராணம், வீரவனப் புராணம் முதலியவற்றை இயற்றித் தந்தார். சேக்கிழார் பிள்ளைத் தமிழைச் செந்தமிழுக்கு அணி சேர்க்கும் வகையில் பிள்ளையவர்கள் இயற்றக் காரணமாக இருந்தவர் வன்றொண்டச் செட்டியாரே ஆவார்.

சேக்கிழார் பெருமானிடம் இவர் கொண்டிருந்த ஈடுபாட்டினால் அப்பெருமானுக்குத் தேவகோட்டையில் ஒரு திருக்கோயில் கட்டிப் பூசை நிகழ ஏற்பாடு செய்ய எண்ணித் தனது பொருள் வசதிக்கேற்ப ஓர் இடத்தை விலைக்கு வாங்கி அதில் திருக்கோயில் அமைக்கத் திட்டம் செய்தார்.

அப்போது தேவகோட்டை நகரத்தார் அனைவரும் ஒன்று கூடி அதுவரை தேவகோட்டைக்கென்று தனிச் சிவாலயம் இல்லாதபடியால் சிவன் கோயில் அமைக்க முடிவு செய்து வன்றொண்டர் சேக்கிழார் கோயிலுக்கென வாங்கிய இடத்தைச் சிவன் கோயிலுக்குத் தர வேண்டுமெனவும், அதற்குரிய விலையைத் தந்து விடுவதாகவும் கேட்டுக் கொண்டனர்.

வன்றொண்டர் கோயிலுக்கென வாங்கிய இடத்தை விலைக்குக் கொடுக்க முடியாது என்றும், அமைக்க இருக்கும் சிவன் கோயிலில் தனிக் கருவறையுடன் சேக்கிழாருக்கு ஒரு தனிக்கோயில் அமைக்க வேண்டுமென்றும், நாள்தோறும் பரிவார மூர்த்திகளுக்குப் போலல்லாமல் மூலஸ்தான மூர்த்திகளுக்குப் போல எல்லாக் கால பூசைகளும் சேக்கிழாருக்கு நடைபெற வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ள நகரத்தாரும் அதற்கு இசைந்தனர்.

சிவன் கோயிலில் ஒலித்துக் கொண்டு இருக்கும் ஆராய்ச்சி மணி அந்தக் காலத்தில் வார்ப்பு வேலையில் சிறப்புப் பெற்றிருந்த செய்கோனுக்கு (வியட் நாம்) எழுதி சேக்கிழார் திருக்கோயிலுக்காக வரவழைக்கப்பட்டதாம். அந்த மணியில் சேக்கிழார் திருக்கோயில் என்ற பெயரும் எழுதப்பட்டுள்ளது.

இத்திருக்கோயிலில் உள்ள சேக்கிழார் பெருமான் திருவுருவம் அவரது அவதாரத் தலமாகிய குன்றத்தூர் மலையிலிருந்து கொண்டு வந்த கல்லில் அமைக்கப் பெற்றது.

OOO

7



தமிழ் வள்ளல் மெய்யப்பனார்
(11.5.1910 - 9.3.1967)

சேக்கிழார் விழாவிற்குக் காரணமானவர் வன்றொண்டர். அதற்குப் பெரிதும் துணை நின்றவர் தமிழ் வள்ளல் மேனா.

'மேனா'

'தமிழ் வள்ளல்'

அரை நூற்றாண்டுக் காலம் தமிழ் வள்ளல் மெ. அவர்கள் அறியாத தமிழ் அறிஞர் இல்லை. அவரை அறியாத தமிழ் அறிஞரும் இல்லை. வள்ளல் அவர்கள் தேவகோட்டையை ஒரு குட்டித் தமிழ் உலகம் ஆக்கினார். அவர் நடத்திய சேக்கிழார் விழாவிற்கும், அவர் வீட்டுத் திருமணம் முதலிய சிறப்புகளுக்கும் பற்பல தமிழறிஞர்கள் ஆண்டுதோறும் வந்த வண்ணம் இருந்தனர். புலவர்கட்கெல்லாம் மெ. அவர்களின் இல்லத்தில் விருந்துபசாரம் சிறப்பாக நிகழும்.

தேவகோட்டையிலும், சென்னை போன்ற நகரங்களிலும் மெ. அவர்கள் எந்நேரமும் புலவர் சூழலிலேயே இருப்பார். தமிழ் பற்றியும், சைவ சமயம் பற்றியும் உரையாடுவதில் அவருக்கு மிகுந்த விருப்பம்.

வெளியூர்ட்குச் செல்லும் மேனா தனியே செல்வதில்லை. அவர்களுடன் எப்போதும் இரு புலவர்களாவது பக்கத்தில் இருப்பார்கள். தமது பங்காளிகளுக்குக் கொடுத்து வந்த மரியாதையைப் புலவர்கட்கும் அளித்து வந்தார். தைப் பொங்கலன்று தம் பெண் மக்கள் வீடுகட்குப் பொங்கற்சீர் கொடுத்து அனுப்புவது போலவே மேனா தமிழ்ப் புலவர்கள் வீடுகட்கு அரிசி, கரும்பு, தேங்காய், மஞ்சள் கொத்து போன்றவற்றை ஆண்டு தோறும் அனுப்பி வந்தார்.

மேனா ஏராளமான பேருக்குத் தமிழ் படிக்க உதவியிருக்கிறார். மேலைச் சிவபுரி சன்மார்க்க சபையில் பல மாணவர்கள் கல்வி பயில உதவியதுடன் அவர்களுக்கான மற்ற செலவுகளையும் தாமே ஏற்றுக் கொண்டார். அதேபோல மயிலம் தமிழ்க் கல்லூரியில் பயின்ற மாணவர்கள் பலருக்கும் உதவியிருக்கின்றார்.

திருவையாறு தமிழ்க் கல்லூரியில் படிக்கத் தமிழண்ணல் பரிந்துரைக் கடிதத்துடன் மேனா அவர்களிடம் வந்தார். தங்க இடம் கொடுக்குமாறு கணக்குப் பிள்ளைக்கும், தம் பிள்ளைகள் போல கவனித்துக் கொள்ளுமாறு கல்லூரி முதல்வருக்கும், வைணவப் பேரறிஞர் புருஷோத்தம நாயுடு வுக்குமாக மூன்று பரிந்துரைக் கடிதங்கள் கொடுத்தார். "பங்களாவிலிருந்து வந்து படிக்கும் பிள்ளை" என்று தமிழண்ணலுக்குத் திருவையாற்றில் பெருமதிப்பு.

மேனாவின் அரவணைப்பில் இருந்து இன்று உயர் நிலைக்கு வந்துள்ளவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் முனைவர் சுப. அண்ணாமலை, பேராசிரியர் திரு. சொர்ண காளீஸ்வரன் ஆகியோர் ஆவர். அறிஞர்கள் தெ.பொ.மீ., மொ.அ. துரையரங்கனார், அ.ச.ஞா. போன்ற பெரும் புலவர்கள் எல்லாம் அடிக்கடி வள்ளலைச் சந்திக்க வருவர். அவர்கட்கும் எத்தனையோ உதவிகள். முனைவர் சுப. அண்ணாமலை ஐந்தாண்டுகள் பி.ஓ.எல் (ஆனர்ஸ்) படிக்க நிதியுதவி வழங்கினார். கருமுத்து தியாகராசர் கல்லூரியில் பணியில் அமர்த்தினார். தெ.பொ.மீ. அவர்களிடம் மேனா பேரன்பு பூண்டிருந்தார். அவரது வெள்ளி விழாவினை மேனா சிறப்புற நடத்தினார். சிந்தாதிரிப்பேட்டையில் தெ.பொ.மீ. அவர்களின் உருவச் சிலையை நிறுவினார். குருதேவரின் கட்டுரைகளை நூல்

வடிவமாக்கி மணிவிழாவில் வெளியிட்டார். தேவகோட்டை நகரத்தார் உயர்நிலைப் பள்ளியில் திருவள்ளுவர் விழா, திருக்குறள் போட்டி ஆகியவை ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெற வழிவகுத்தார். பள்ளிகளில் பரிசுகளாக வழங்க நூற்றுக்கணக்கான தமிழ் நூல்களை வாங்கிக் கொடுத்துள்ளார். தஞ்சை நாட்டார் பேரவை, கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் புரவலராக இருந்தார்.

நடமாடும் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம் அவர். வண்ணச்சரபம் தண்ட பாணி சுவாமிகள், மயிலம் சிவஞான பாலைய சுவாமிகள், ஞானியார் சுவாமிகள், வன்றொண்டர் செட்டியார், காரைக்குடி சொக்கலிங்க ஐயா முதலிய மறைந்த தமிழ் அறிஞர்கள் பற்றியும், அன்று வாழ்ந்து கொண்டிருந்த நூற்றுக்கணக்கானவர் பற்றியும் அவர் வாழ்வில் நடந்த சுவையான சம்பவங்கள் பற்றியும் மேனா மணிக்கணக்கில் கூறுவார்.

மேனா பா இயற்றும் இயல்புடையவர் அவர் எழுதிய நூல்கள் வருமாறு: 1. திருவையாறு அறம் வளர்த்த நாயகி அறியவர். 2. கருதாவூரணி கயிலாச விநாயகர் நான்மணி மாலை 3. தமிழ் குன்றை நகர்க் குமரன் போற்றிப் பதிகம், 4. செயங்கொண்ட சோளீசர் போற்றிப் பதிகம், 5. திருவேங்கடம் ஏடகநாதர் மெய்வருக்க மாலை, 6. திருவையாறு ஐயாறப்பர் நவமணி மாலை, 7. கோட்டையூ வயல் நடராசர் உயிர் வருக்க மாலை, 8. இலம்பையங்கோட்டூர் அரம்பேசன் திரு விருத்தப் பதிகம், 9. சிவபூசை முறை அநுட்டான விதி, 10. சைவ சித்தாந்த விதி, 11. சைவ தர்ப்பண விதி, 12. சட்பிரபந்தம், 13. துவைதப் பிரபந்தம்.

திருவையாற்றில் ஐயாறுடைய அடிகளின் ஆலயத்தில் அறம் வளர்த்த நாயகியாம் அம்பிகைக்குப் பெருநிதியாகப் பத்து இலட்ச ரூபாய் செலவில் திருப்பணி செய்து 40,000 ரூபாய் செலவில் 2.5.1937 அன்று குட நீராட்டும் செய்தார். திருக்கோயில் நிர்வாகத்தாராகிய தருமையாதீனம் குருமகா சந்நிதானம் குடநீராட்டு விழாவில் வள்ளல் மெ அவர்களை யானை மீது அமர்ந்து வரச் செய்து தாம் பல்லக்கில் அமர்ந்து ஊர்வலம் நடத்தி வள்ளல் அவர்களுக்குப் பெருஞ்சிறப்புச் செய்து வாழ்த்தினார்.

சென்னையை அடுத்த கூவத்தில் திருஇலம்பையங் கோட்டூர் சந்திரசேகருக்குப் பெருங்கோயிலாகக் கட்டிக் குடநீராட்டும் செய்துள்ளார்.

திரு. ஏடகம் ஏடகநாதேஸ்வரர் திருக் கோயிலுக்கு மெ அவர்களும், அவர்களின் குடும்பத்தாரும் ஏழு லட்ச ரூபாய் செலவில் திருப்பணி செய்து 8.6.1939 அன்று குடநீராட்டு விழாவும் செய்து முடித்தனர்.


மேனா அவர்கள் சொத்து வரி, புள்ளி வரி ஆகியவற்றை வசூலித்து நேமம் கோயில் திருப்பணியையும், குடநீராட்டையும் செய்து வைத்தார். நித்ய பூசைக்கு நன்கொடை திரட்டி அத்தொகையை மூலதனமாக வைத்து வட்டி யிலிருந்து செலவு செய்ய ஏற்பாடு செய்தவர்களில் மேனா அவர்களின் பங்கு பெரியது.

சிவ வழிபாடு செய்தல், சைவ உணவு மட்டுமே உட்கொள்ளுதல், சைவ சித்தாந்தத்தைக் கற்பது, கற்பிப்பது, சைவ மடங்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிப்பது போன்ற சைவப் பணிகளையும் செய்து வந்தார். தூத்துக்குடி முத்தையாப் பிள்ளையிடம் இலக்கணமும் சக்திவேல் பிள்ளையிடம் இலக்கியங்களும் கற்றார். பழநி ஈசான சிவாச்சாரியாரிடம் சிவதீட்சை பெற்றார். ஒவ்வோர் ஆண்டும் சிவபூசகர்களை ஓரிடத்தில் கூட்டிச் சிவபூசை மாநாடு நடத்தி வந்தார். பூசை எடுத்துக் கொள்பவருக்குப் பூசைக் கலன்களும் உருத்திராக்கமும் நன்கொடையாக அளித்து வந்தார். தவத்திரு குன்றக்குடி அடிகளார் 'அருள்நெறித் திருக்கூட்டம்' என்ற அமைப்பைத் தொடங்கிய போது அவர்களுக்கு 'மெ' அவர்கள் உறுதுணையாக இருந்தார். சிவத்தலங்கள் அனைத்திற்கும் யாத்திரை சென்று வந்தார். எங்குச் சென்றாலும் தான் மட்டும் செல்லாது உறவினர்களையும் நண்பர்களையும் அழைத்துச் செல்வார்.

குன்றக்குடி அடிகளார் இராசா சர். முத்தையாச் செட்டியார் தலைமையில் 'தமிழ் வள்ளல்' என்ற பட்டத்தை இவருக்கு வழங்கினார். 11.5.1910ல் தேவகோட்டையில் சின்னச் சேவுகன் செட்டியாருக்கும் முத்துக் கருப்பி ஆச்சிக்கும் தலைமகனாகத் தோன்றிய மெய்யப்ப செட்டியார் 9.3.1967 மகா சிவராத்திரியன்று சிவனை வழிபடும் நிலையில் இவ்வுலகை நீத்து இறைவன் திருவடிப் பேற்றை எய்தினார்.

ooo

8



பெரிய மைனர் தேவகோட்டை இராமநாதன் செட்டியார் (16.2.1888-1942)

தேவகோட்டை இராமநாதன் செட்டியார் ஐயா 106 ஆண்டுகளுக்கு முன் காளத்தியில் திருப்பணி செய்தவர்கள்

16.2.1888ல் நச்சாந்துபட்டியில் பிறந்து தனது 5வது வயதில் தேவகோட்டைக்கு சுவீகாரப் புதல்வராக வந்தவர்கள்.

1912ல் தன் தம்பியுடன் இணைந்து ரூபாய் 8,00,000/- (ரூபாய் எட்டு லட்சம்) செலவில் அம்பாள் சன்னதி கட்டி கோயில் முழுவதும் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்தார்கள். பசுமடம் நந்தவனம் ஏற்படுத்தி கோயிலுக்கு நித்யபடி பூஜைக்கு ஏற்பாடு செய்தார்கள்.

1942ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் (விசு வருடம் மாசி மாதம் இரண்டாம் நாள்) மகா சிவராத்திரி அன்று காளஹஸ்தியில் முதல் கால

பூஜை நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. ஐயா தனது மனைவி குப்பாள் ஆச்சியுடன் ஆலயத்தை வலம் வருகின்றார்கள். சிவ புராணம் ஓதியபடியே காளத்திநாதர் சன்னதியில் கண்ணீர் மல்கி நிற்கின்றார்கள். பின்னர் அம்பிகை ஞானப்பூங்கோதை சன்னதிக்கு வந்து அம்பிகையை மெய்யுருக வணங்கி நிற்கின்றார்கள். அருகில் மனைவி குப்பாள் ஆச்சி. அப்போதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது. ஐயா தனது மனைவி குப்பாள் ஆச்சியின் திருமாங்கல்யத்தை (தாலிச் சங்கிலி) தரும்படிக் கேட்டு வாங்கி குருக்களிடம் கொடுத்து அம்பாளுக்கு அணிவிக்கச் செய்தார்கள்.

அன்று இரவு லிங்கோத்பவ பூஜையில் கலந்து கொள்வதற்காக குளித்துவிட்டு தன் வீட்டு மாடியில் கோபுர தரிசனம் பார்த்தபடி பூஜையில் அமர்ந்துள்ளார்கள். இரவு 2 மணியளவில் கையில் ஜெபமாலை, தலையில் ருத்ராட்ச மாலை உடல் முழுவதும் திருநீறு பூசி ஜபம் செய்யும் நிலையில் அமர்ந்த கோலத்தில் இறைவனாரால் எழுந்தருளி ஆட்கொள்ளப்பட்ட பெரும்பேறு பெற்றவர்கள்.

இராமநாத ஐயாவின் சிலை கோயிலில் தேவஸ்தான காட்டேஜ் அருகே அமைந்து உள்ளது.

இறையருள் பூரணமாக கிடைக்கப் பெற்ற ஐயாவை வணங்கினால் வாழ்வில் வாராது இடர் என்பது திண்ணம்.

OOO

9



வீர.லெ. சிந்நயச் செட்டியார்
(1855-1900)

மாத்தூர் - உறையூர்
தேவகோட்டை
புலவர், சைவ சித்தாந்த வித்தகர்

மேலவீட்டுச் சிந்நயச் செட்டியார் என்றழைக்கப்படும் இவர் லெட்சுமணன் செட்டியாரின் நான்காவது மகன். யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலரிடமும் தேவகோட்டை வன்றொண்டச் செட்டியாரிடமும் மாணவராகத் தமிழும் சைவசித்தாந்த சாத்திரங்களும் பாடம் கேட்டார். காரைக்குடி சொக்கலிங்க அய்யா உடன் படித்த மாணவர் ஆவார்.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையால் 'வித்வத் சிகாமணி' என்று பட்டம் வழங்கிப் பாராட்டப் பெற்றவர். பழுத்த தமிழ்ப்புலமையும் அருள்பழுத்த சமய ஞானமும் உடையவர்.

சேது சமஸ்தானப் புலவரும் தேவகோட்டை அழ.சுப. சுப்பிரமணியன் செட்டியாரும் இவரது மாணவர்கள்.

இவருடைய தூண்டுதலாலேயே தேவகோட்டை சிவாகமசங்கம் தொடங்கப்பெற்று, சுப்பிரமணியன் செட்டியார் அதைப் புரந்து போற்றி வந்தார்.

வள்ளல் பாண்டித்துரைத் தேவர் இவரது நெருங்கிய நண்பர். மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தை வள்ளல் தோற்றுவிக்க இவரே காரணர்.

நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாற்றை முதன் முதல் எழுதி வெளியிட்டவர் இவரே. துலாவூர்ச் செப்பேடுகளையும் கல்வெட்டுக்களையும் ஆதாரமாகக் கொண்டு அவ்வரலாற்றை எழுதினார்.

குன்றக்குடி மயின் மலைப் பிள்ளைத் தமிழ், திருவொற்றியூர்ப் புராணம், தேவைத் திரிபந்தாதி, சிலம்பைப் பதிற்றுப் பத்தந்தாதி, மதுரை மீனாட்சியம்மை பதிகம், காசியமக அந்தாதி, அருணைச் சிலேடை வெண்பாமாலை ஆகியன இவருக்கு அழியாப் புகழ் சேர்க்கும் நூல்கள்.

இவர் வாக்குப் பலிதம் உள்ளவர். இவரது பாடலால் ஆண் பனை காய்த்த அற்புத நிகழ்ச்சி இவர் வாழ்க்கையில் நடைபெற்றதாகக் கூறுவர்.

OOO

10

வெ.ஆதி.மா. சிதம்பரம் செட்டியார்

இளையாத்தங்குடி - பெருமருதூருடையார்

தேவகோட்டை

புலவர், தமிழ் வடமொழி அறிஞர்

நகரத்தார் மரபில் சாத்திர தோத்திரங்கள் கற்றுத் துறைபோகிய புலவர் பெருமக்களில் இவரும் ஒருவர். 1930ஆம் ஆண்டில் வெளியிடப் பெற்றுள்ள 'விசுவநாதர் கோயில் திருப்பணி முறையீடு' என்னும் நூலில் 63 புராண நூல்கள் உள்ளிட்ட 139 தமிழ் நூல்கள், ஆகமங்கள் உள்ளிட்ட 23 வடமொழி நூல்களைப் பிரமாண மேற்கோளாக எடுத்துக் காட்டியுள்ளார். வடமொழி சுலோகங்களைத் தமிழ் எழுத்திலும் அதன் கருத்தைத் தமிழிலும் கொடுத்துள்ளார்.

1. தேவகோட்டைக் கலங்காத கண்ட விநாயகர் விண்ணப்ப மாலை
2. அமிஞ்சிக்கரை வரசித்தி விநாயகர் பதிகம்
3. தில்லைக் கற்பக விநாயகர் வெண்பா அந்தாதி
4. தில்லைச் சிவகாமியம்மை பதிகம்
5. காசி விசுவநாதர் கோயில் திருப்பணி முறையீடு
6. தில்லைக் கற்பக விநாயகர் சதகம்
7. தில்லைக் கற்பக விநாயகர் தோத்திரம் எழுபது ஆகிய நூல்களை இவர் படைத்துள்ளார்.

'விசுவநாதர் கோயில் திருப்பணி முறையீடு' வரலாற்றுக் குறிப்புடையதாகவும் இவருடைய பரந்துபட்ட ஆழமான இலக்கண இலக்கியப் புலமையைக் காட்டுவதாகவும் அமைந்துள்ளது.

OOO

11

தொண்டிச் செட்டியார்

தேவகோட்டையில் விநாயகர் வழிபாடு, முருகன் வழிபாடு, சிவ வழிபாடு ஆகியவற்றில் மிகச் சிறந்த வகை தி. வகையாகும். திண்ணப்ப செட்டியார் ஊருணியும், ஸ்ரீ கைலாச விநாயகர் கோவிலும், தி.ராமசாமி வீடு பழனியாண்டவர் வழிபாடும், கோட்டூர் சௌந்தரநாயகி அம்பாள் உடனாய அகஸ்தீஸ்வரப் பெருமான் வழிபாடும் தி. வகையாரை மேன்மையுறச் செய்துள்ளன. இவற்றுக் கெல்லாம் மூல புருடராகிய தேனஞ் செட்டியார் குமாரர் திண்ணப்ப செட்டியார் கி.பி. 1686இல் (ஏறத்தாழ) பிறந்தார்.

திண்ணப்பச் செட்டியாருக்குச் சுமார் கி.பி. 1718இல் இரண்டு புத்திரர் பிறந்தனர். மூத்த புதல்வர் வெள்ளையப்ப செட்டியார், இளையவர் இராமநாதன் செட்டியார்.

இளைய குமாரராகிய தி. இராமநாதன் செட்டியார் குன்றக்குடியில் ஆறுமுகப் பெருமானை வழிபாடு செய்து வந்ததோடு தேவகோட்டையில் ஏறத்தாழ கி.பி. 1740இல் "பழநியாண்டவர் சுவாமி வீடு" அமைத்து அதில் தினந்தோறும் நெய்தீபம் ஏற்றி வைத்துத் தியானித்தும் பழநியாண்டவர் பூசையிட்டும் வழிபட்டு வந்தார். இன்றும் அந்தப்பூசை தொடர்ந்து சிறப்பாக நடைபெற்று வருகிறது.

அதே காலகட்டத்தில் ஏறத்தாழ கி.பி. 1740-1745இல் இராமநாதன் செட்டியாருக்கு இரண்டு புத்திரர் பிறந்தனர். மூத்தவர் பழனியப்ப செட்டியார், இளையவர் திண்ணப்ப செட்டியார்.

பழனியப்ப செட்டியாருக்கு ஆறு புத்திரர்கள் பிறந்தனர், (1) சுப்பிரமணியன் செட்டியார் (2) இராமநாதன் செட்டியார் (3) அண்ணா மலை செட்டியார் (4) திண்ணப்ப

செட்டியார் (5) வெள்ளையப்ப செட்டியார் (6) பழனியப்ப செட்டியார் ஆகியோர் ஆறு மக்கள்.

பழனியப்ப செட்டியார் முருகப் பெருமானை வழிபாடு செய்து புத்திரப்பேறு பெற்றார் என்பதனைச் சவ்வாதுப் புலவர், கொடுமளூர்ப் பதிகத்தில் பாடுகிறார்.

கயிலாச நாதர் நித்தியகலியாணி தம்
கருணா கடாட்சமுண்டாம்
கல்வாச நாட்டு இளசை மேவு பெருமருதூர்
கதிக்கு நகரப் பிரதாபன்
செயலாளி திண்ணப்ப வணிகன் அருளால் வந்து
சென்மித்த வெள்ளையப்பன்
செம்மை சேர்தரு ராமநாத மதியூகி தரு
செல்வவான் பழனியப்பன்
தயைமேவு சுப்ரமண்யா என்று கூப்பிடச்
சந்தான பாக்யம் நல்கிச்
சத்தாங்கமும் கொடுத்து எத்தேச காலமும்
தற்காத்த தெய்வம் நீயே
குயில்கூவு சேவலைமலை செந்தூர் திருப்பரங்
குன்றில் உறையும் கடம்பா
கோகனக வாவி புடைம்ழ் கொடுமளூர் மேவு
குமரகுருபர முருகனே.

என்னும் பாடல் தி.வகை வரலாற்றுச் சான்றாக விளங்குகிறது.

சவ்வாதுப் புலவர் காலம் கி.பி. 1745 முதல் 1809 வரையாகும். இதே கால கட்டத்தில் தி.ராம. பழனியப்ப செட்டியார் வாழ்ந்துள்ளார். அவருக்கு ஆறு மக்கள் முருகன் அருளால் பிறந்தனர்.

பழனியப்ப செட்டியாரின் முதற்புத்திரர் சுப்பிரமணியன் செட்டியார் (சுமார் கி.பி. 1800) இவரது துணைவியார் சிகப்பி ஆச்சி.

சுப்பிரமணியன் செட்டியாருக்கு நாகப்ப செட்டியர், அருணாசலம் செட்டியார் என இரு புதல்வர்கள் பிறந்தனர்.

அருணாசலம் செட்டியார் தொண்டிச் செட்டியார் என அழைக்கப் பெற்றார். (சுமார் கி.பி. 1830) இவரது

துணைவியார் செல்லம்மை ஆச்சி. இவர்களுக்குத் தொண்டியில் உப்பளம் இருந்தது. இவர்களது மாமனார் வீடு அரு.லெ. குடும்பம். அந்தக் குடும்பத்தின் தொண்டிச் சத்திரத்தையும் இவர்கள் மேற்பார்வை செய்து வந்தால் தொண்டிச் செட்டியார் என அழைக்கப் பெற்றார். இவர்கள் வீடு இருந்த வீதிக்குத் தொண்டியார் வீதி எனப் பெயர் வந்தது.

தொண்டிச் செட்டியாராகிய அருணாசலம் செட்டியாரைப் பற்றித் திரு.வெ.ஆதி.மா. சிதம்பரச் செட்டியார் தமது விசுவநாதர் கோவில் திருப்பணி முறையீடு என்னும் நூலில் பின்வருமாறு எழுதுகிறார்:

பழ.சு.அரு. அருணாசலம் செட்டியார் என்பவர் கல்வியும் அன்பும் அருளும் ஒழுக்கமும் வாய்ந்தவர், சிவபூசை, சிவநாம சங்கீர்த்தனம், சைவ சாத்திர புராண சிரவணமுடைய வராய் அடியார்க்கு அன்னம் பொருள் அளித்தல் ஆதி சற்காரியங்களில் தமது வாழ்நாள் முழுவதும் போக்கியவர். திருக்குறள் 432ல் "இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா உவகையும் ஏதம் இறைக்கு" என வருமாற்றை உணர்ந்து மாண்பிறந்த மானத்தைக் கைக்கொள்ளாதவராய்ச் சிவாலயத்திற்கு சென்று சந்நிதியில் நிர்தனத்தோடு தரிசித்துச் சித்த மடங்கச் சிவானந்தம் மேவிடப் பெற்றவர்.

இவர், அறியாமையால் அசாஸ்திரிகமான அக்கிரமச் செய்கையில் பிரவேசிப்பாரையும் அவர் மாட்டுற்ற அன்பினால் அதற்கு உடன்படுவாரையும் அவர்களது உயிருக்கு உறுதி கருதி ஆவன கூறித் தடுத்துச் செந்நெறியில் புகுத்தும் புரையில்லாத உள்ளமுடையவர். அவர்கள் திரும்புவதற்கு ஞாபக ஏதுவாய்படி ஞாதியர் கிருகங்களில் ஸ்பாஸ்ப காரிய நிகழ்ச்சியில் கூடும்போதெல்லாம்

மதத்தால் அழிந்ததடா
மன்னவனார் கோட்டையெல்லாம்
இடும்பால் அழிந்ததடா
இந்திரனார் கோட்டையெல்லாம்

என ஆரவாரிப்பார். அதற்கடுத்தபடியாய்,

பிறர் மனையவரைப் பெற்றதாய் எனவும்
பிறர் பொருள் எட்டியே எனவும்
பிறர் பிழையுரைத்தல் பெருமை யன்றெனவும்
பிறர்துயர் என்துயர் எனவும்
இறுதியே வரினும் என் மனக் கிடக்கை
எம்பிரான் இவையென உரைத்தான்
பிறவியும் மடியுமாறு மல்லியற்கை
வலியை கூர் வாயுவின் மைந்தன்

என்னும் மகாபாரதச் செய்யுளைக் கூறுவார்.

தென்திசைக் கடவுள் வந்து விடுவான்
அன்றறிவாம் என்னாது அறம் செய்க

என்பார்.

எல்லாம் சிவாக்ஞை சிவ சிதம்பரம் என்று சொல்லுகிறோம் என்று அடிக்கடி முழங்குவார்.

இவரைப் பார்த்த பெரியோர்கட்கெல்லாம்,

இருக்கினும் நிற்கும் போதும் இரவுகண் துயிலும் போதும்
பொருக்கென நடக்கும் போதும் பொருந்தி ஊண் துய்க்கும் போதும்
முருக்கிதழ் கனிவாயாரை முயங்கி நெஞ்சழியும் போதும்
திருக்களா உடைய நம்பர் சிந்தை உன் பாலதாமே

என்னும் திருக்கருளைப் பதிற்றுப் பத்தந்தாதிச் செய்யுள் நினைவில் எழும். இவர் இவ்வாறு நெடுங்காலம் வாழ்ந்திருந்து அந்தத்தில் தாயத்தார் சுற்றத்தார் அனைவரிடத்திலும் "நாம் கைலாசம் போகின்றோம்; திரும்போம்" எனக் கம்பீரத்துடன் சொல்லிக் கொண்டு போய் மதுரையில் சிவபதம் அடைந்தனர்.

தொண்டி அய்யா என்று அழைக்கப்படும் அருணாசலம் செட்டியாருக்கு அவரது வழி முறையினர் இன்று ஒன்று கூடிப் படைப்பு நடத்துகின்றனர்.

OOO

12



ஜமீந்தார் அருணாசல சுவாமிகள்
(1863-1933)

தமது 56வது வயதில் சந்நியாசம் பூண்டு துறவு வாழ்க்கை மேற்கொண்டவர்கள். வாக்குப் பலிதம் உள்ளவர்கள்.

காளையார்கோவில் இரண்டாம் பிரகாரம், மைய மண்டபம், வேதாந்த மடம், திருப்பாண்டிக் கொடுமுடி, இராமேஸ்வரம், வைகல் முதலான தலங்களில் திருப்பணி செய்துள்ளார்.

உப்பூர் விநாயகர் கோவில் திருவிழாவைச் சிறப்பாக நடத்தியவர். கலைஞர்களைப் போற்றியவர்.

ooo

13



சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்
பாலகவி வே. இராமநாதன் செட்டியார்
(9.7.1915-15.2.1999)

பிள்ளையார்பட்டி, தேவகோட்டை

சைவ சித்தாந்த வித்தகர்

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் என அழைக்கப்படும் இவர் கோனாபட்டில் கோவில் செட்டியார் குடும்பத்தில் மகாதேவ முருகப்ப செட்டியார் - சீதை ஆச்சிக்கு இரண்டாவது மகனாகச் சுவாதி நட்சத்திரத்தில் பிறந்தார். இவருடைய தந்தையார் சைவ மடங்களோடு தொடர்பு கொண்டிருந்தார். இவரது இரண் டாவது வயதில் தந்தையார் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சென்று மகா சந்நிதானத்தை வழிபடச் சென்ற போது பண்டார சந்நிதானம் மரபையும் மீறி இவரை மடியில் தூக்கி வைத்துக் கொண்டு நெற்றியில் திருநீறு பூசி 'இவன் ஞானசம்பந்தர் போல் வருவான்' என்று வாழ்த்தினாராம்.

தந்தையார் கோனாபட்டில் நிறுவிய கற்பக விநாயக கலாசாலையில் தொடக்கக் கல்வியும், 12ஆவது வயதில்

வித்துவான் டி.எஸ். ஆழ்வாரய்யங்காரிடம் தமிழ்ச்சங்கப் பாடத் திட்டப்படி இலக்கண இலக்கியங்களும் ஆங்கிலம் வடமொழி இசை ஆகியனவும் கற்றார். தொடர்ந்து முறையான பயிற்சியால் இவர் கல்வி மேம்பாடடைந்தது. இளமையிலேயே சொற்பொழிவாற்றும் திறன் பெற்றிருந்ததால் தமது 14ஆவது வயதிலேயே கீழச்சிவல்பட்டி சாதுசங்க மகாசபைக்குத் தலைமை வகித்து நடத்தினார். இவரது விரைந்து கவியெழுதும் ஆற்றலைப் பாராட்டி ஆத்தங்குடி சனாதன தர்ம மகாசபையார் நீதிபதி மாண்புமிகு கே.எஸ். இராமசாமி சாஸ்திரி தலைமையில் இவருக்குப் பாலகவி என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தார்கள்.

1934இல் அமராவதி புதூர் வயிநாகரம் நாகப்ப அய்யா அவர்களின் பேரர் வேங்கடாசலம் செட்டியாருக்கு இவர் பிள்ளை வந்தார். பிள்ளை கூட்டிக் கொண்ட இவரது தாயார் அலமேலு ஆச்சி தேவகோட்டையில் வாழ்ந்து வந்தார்கள். அவ்வூரிலேயே இவர் பாலறாவாயர் இல்லம் என்னும் வளமனை கட்டி, அவ்வூரில் அமைந்த வீதிக்கும் சம்பந்தர் தெரு வெனப் பெயர் சூட்டச் செய்து அங்கு வசிக்கத் தொடங்கினார்.

காரைக்குடி சொக்கலிங்க அய்யா, கொரடாச்சேரி வாலையானந்த சுவாமிகள் முதலியோரிடம் இவர் சைவமும் தமிழும் பயின்றார். பழனி சிவத்திரு ஈசான சிவாசாரியார் சுவாமிகளிடம் சிவ தீட்சைகளை முறையே பெற்று 1947ஆம் ஆண்டு மகா சிவராத்திரியன்று நிர்வாண தீட்சைப் பேறும் பெற்றார். அவரிடம் திருமுறைப் பூசை பெற்று ஆண்டுதோறும் சித்திரை முதல் நாளில் தொடங்கி நாளுக்கு 50 பாடல்கள் வீதம் பாராயணம் செய்து பன்னிரு திருமுறை களையும் பங்குனி இறுதி நாளில் நிறைவு செய்து வந்துள்ளார். மெய்கண்ட சாத்திரங்களையும் ஆண்டுக்கு நான்குமுறை பாராயணம் செய்து படித்து வந்துள்ளார். இவரிடம் சிவதீட்சை பெற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ மூவாயிரம். தமிழ் நாட்டிலும் இலங்கை, மலேசியா முதலிய வெளிநாடுகளிலும் சைவ சித்தாந்தச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். மதுரை, திருச்சி போன்ற நகரங்களில் தொடர்ந்து திங்கள் தோறும் சைவ சித்தாந்தப் பாடம் சொல்லி வந்திருக்கிறார்.

'செட்டிநாடு' இதழின் ஆசிரியராகவும், பின்னர் அதன் உரிமையாளர் ஆசிரியராகவும் இருந்து இதழ் நடத்தி வந்தார். நற்றிணை முழுவதற்கும் விளக்கவுரை 'செட்டிநாடு' இதழிலும் குமரகுருபரர் பிரபந்தங்கள் முழுவதற்கும் விரிவுரை 'குமரகுருபரன்' இதழிலும் தொடர்ந்து எழுதியுள்ளார்.

தேவகோட்டைக் கந்தர்சஷ்டி விழாவின் தொடக்கத்தில் இவருக்கும் பங்குண்டு. சேக்கிழார் திருநாட்கழகத்தை நிறுவி மிகச் சிறப்பாகச் சேக்கிழாருக்கு விழா எடுத்தார். மாதந்தோறும் சேக்கிழார் திருநட்சத்திரத்தில் தேவகோட்டை நகரச் சிவன் கோவிலில் எழுந்தருளியுள்ள சேக்கிழாருக்கு அபிடேக ஆராதனை வழிபாடு செய்து வந்துள்ளார். தேவகோட்டை சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கத்தின் தலைவராகப் பொறுப்பேற்றுச் சைவ சித்தாந்தப் பாடம் நடத்தியுள்ளார். இவருடைய புலமையைப் போற்றித் தருமையாதீனம் இவரை 'ஆதீன வித்வான்' ஆக்கிச் சிறப்பித்தது.

இவர் 37 செய்யுள் நூல்களும் 12 உரைநடை நூல்களும் 3 உரைநூல்களும் எழுதியுள்ளார். சைவ அனுட்டான விதி, பரார்த்த சிவபூஜாவிதி, சிவாலய தரிசன விதி போன்றவை சிவாகம நெறியை உணர்த்தும் தமிழ் நூல்களாகும். சிவஞானபோதம் நூலுக்கு இவர் எளிமையாகவும், சுருக்கமாகவும் தெளிவுரை எழுதியுள்ளார். இசைப்புலமை வாய்ந்த இவர் தமிழில் கீர்த்தனைகள் இயற்றி யுள்ளார். இவரது இசைப்பாடல்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழிசைப் பாடல்கள் 13ஆவது தொகுதியாக வெளிவந்துள்ளன.

இவர் விரிவுரை அரசு, சித்தாந்தப் புலவர் மாமணி, சித்தாந்த சைவ வித்தகர் முதலிய பட்டங்களையும், லெ. நாராயணன் செட்டியார் மணிவிழா அறக்கட்டளையின் தமிழ்ச் சான்றோர்க்கான சிறப்புப் பரிசையும் பெற்றுள்ளார். சைவ சித்தாந்த சாத்திர தோத்திரங்களில் இவரளவு வல்லார் எவரும் இலர் என மக்கள் போற்றும் வண்ணம் சைவ சித்தாந்த ஞாயிறாக இவர் விளங்கி வருகிறார்.

ooo

14



சின்ன அண்ணாமலை
(18.6.1920 - 18.6.1980)

இலுப்பைக்குடி, தேவகோட்டை
பதிப்பாளர், விடுதலைப் போராட்ட வீரர்

உய்யக்கொண்டான் சிறுவயலில் நாச்சியப்ப செட்டியார் - மீனாட்சி ஆச்சியின் மகனாகப் பிறந்தார். பெற்றோர் இட்ட பெயர் நாகப்பன், தேவகோட்டை கோவிலூரார் வீட்டுக்குப் பிள்ளை வளரச் சென்றார். அங்கு இட்ட பெயர் அண்ணாமலை. அண்ணாமலை அரசர், திருவை அண்ணாமலை ஆகியோரிடமிருந்து இவரை இனம் பிரித்துக் காட்ட இராஜாஜி சூட்டிய பெயர் சின்ன அண்ணாமலை. அரசியல் மேடையில் சூட்டப்பட்ட இப்பெயரே நிலைத்தது.

ஒன்பதாவது வயதிலேயே காந்தியடி களிடம் ஈடுபாடு கொண்ட இவர் காங்கிரஸ் மேடைப் பேச்சாளரானார். 1942இல் விடுதலை இயக்கப் போராட்டத்தில் தேவகோட் டையில் இவர் பங்கு குறிப்பிடத்தக்கது. திருவாடானைச் சிறையை உடைத்துத் தொண்டர்கள் இவரைத் தோளில் தூக்கி வலம் வந்த நிகழ்ச்சி வரலாற்றுச் சிறப்புமிக்கது. அண்ணாமலையை உயிருடனோ பிணமாகவோ கொண்டு வருவோர்க்குப் பத்தாயிரம் ரூபாய் வழங்கப்படும் என அன்றைய ஆங்கில அரசு அறிவித்தது. தலைமறைவாகக் காசிக்குச் சென்றவர் தம் உறவினர்கள் காவல்துறையால் கொடுமைப்படுத்தப்படுவதை அறிந்து ஊருக்கு வந்து சரணடைந்தார்.

நகைச்சுவை ததும்பப் பேசுவதிலும் எழுதுவதிலும் வல்லவர். சக்தி வை. கோவிந்தனைத் தொடர்ந்து தமிழ்ப் பதிப்புலகில் தமிழ்ப்பண்ணை தொடங்கி இத்துறையில் முன்னோடியாக விளங்கினார். புகழ்பெற்று விளங்கும் பல பதிப்பாளர்கள் இத்துறைக்கு வருவதற்கு இவரே காரணமாவார். நூலை அழகுற அச்சிட்டு வெளியிடுவதில் இவர் வல்லவர். இராஜாஜி, கல்கி, இரசிகமணி டி.கே.சி. போன்றோரின் நூல்கள் தமிழ்ப் பண்ணை வெளியீடாக வந்து நாடெங்கும் பரவின. எழுத்தாளர்களுக்குப் பங்கு உரிமைத் தொகை (ராயல்டி) கொடுக்கும் வழக்கத்தைத் தமிழ்ப் பதிப்புலகில் முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர் இவரேயாவார்.

காந்தியடிகளின் சிலையை நடுவில் வைத்து அதைச் சுற்றிலும் நூல்களைக் காட்சியாக வைத்தார். கோவில் வழிபாடு போல வாசகர்கள் நூல் வழிபாடு செய்ய வைத்தார். புகழ்வாய்ந்த எழுத்தாளர்களின் படங்களைச் சேகரித்து அவற்றைக் கண்ணாடி போட்டு மாட்டி வைத்து வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தினார். கவிரயரசர் கண்ண தாசனுக்கு முதன் முதல் விழா எடுத்தவர் இவரேயாவார்.

'கல்கி' இதழில் இருநூற்றுக்கும் மேற்பட்ட நகைச்சுவைக் கட்டுரைகள் எழுதியுள்ளார். இன்றையப் பிரச்சனை என்ற தலைப்பில் மாதம் ஒரு நூல் எழுதி வெளியிட்டார். 'பூட்டை உடையுங்கள்' என்ற நூலை எழுதியதற்காகச் சிறைத் தண்டனை பெற்றார். 'வங்கப்பஞ்சம்' நூல் எழுதியதற்காக இவருக்கும் எழுத்தாளர் சாவிக்கும் சிறைத் தண்டனை கிடைத்தது. 'சொன்னால் நம்ப மாட்டீர்கள்' இவரது நகைச்சுவைக் கட்டுரைத் தொகுப்பு நூல். நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை இவர் எழுதியுள்ளார். மகாத்மா காந்தியடிகளின் அனுமதியுடன் 'அரிசன்' இதழைத் தமிழில் இவர் வெளியிட்டார். சாவியுடன் இணைந்து 'வெள்ளி மணி' இதழை நடத்தினார். மாலதி, சங்கப் பலகை ஆகிய இதழ்களையும் சில காலம் நடத்தினார்.

தமிழ்த் திரைப்படங்களுக்குக் கதை வசனம் எழுதியுள்ளார். தங்கமலை ரகசியம் இவரது வெற்றிப்படமாகும். ஆயிரம் ரூபாய், கடவுளின் குழந்தைகள் போன்ற திரைப் படங்களை இவர் தயாரித்துள்ளார். தமது மணிவிழா நாளில் மங்கல நீராட்டு நிகழ்ச்சியின்போது, இவர் இவ்வுலகை நீத்தார். சிரிக்கச் சிரிக்கப் பேசி, சிரிக்கச் சிரிக்க எழுதி மற்றவர்களிடம் சிரிப்பை வரவழைத்தவர் எல்லோரும் சிரித்தபடி வாழ்த்தி வணங்கி மகிழும் வேளையிலேயே உயிர் துறந்தார். ○○○

15



நூற்றாண்டை நோக்கி பதிப்புத்துறை முன்னோடி
முல்லை முத்தையா (7.6.1920-9.2.2020)

“தமிழ் நூல்கள் இன்று பல துறைகளில் வெளிவருகின்றன. கவர்ச்சியாகவும் அழகாகவும் அச்சிடப் பெறுகின்றன. இந் நிலையை உருவாக்கியவர்கள் மூவர். சக்தி வை. கோவிந்தன், சின்ன அண்ணாமலை, முல்லை முத்தையா” என முன்னோடிகள் மூவரில் ஒருவராகத் தமிழ் ஆய்வாளர் சோமலெ.வும், தினமணி இதழில் கலாரசிகனும் பாராட்டுகின்றனர். முல்லை முத்தையா பதிப்பாளர், எழுத்தாளர், இதழாளர், மொழி பெயர்ப்பாளர் எனப் பன்முகத் திறமை கொண்ட மாமனிதர்.

முல்லைப் பூ வெள்ளை நிறம். ஒழுக்கத்தின் அடையாளம். தமிழ்ப் பண்பாட்டின் குறியீடு, நறுமணமும் தூயநிறமும் கொண்ட முல்லை மலர் போன்ற ஒரு மனிதர்தான் ‘முல்லை’ என்ற அடைமொழியைத் தன் பெயரோடு கொண்ட முல்லை முத்தையா. தூய உள்ளம், நேர்மை, நாணயம், கலையுணர்வு, பிறரை மகிழ்விக்கும் பண்புகள் இவையே முல்லை முத்தையா.

தமிழறிவும் உணர்வும் கொண்ட குடியில் தோன்றியவர். இவருடைய தாய்வழி அய்யா அஷ்டாவதானம் சிவசுப்பிரமணியன் செட்டியார். தந்தைவழி அய்யா

வித்துவான் நாகப்ப செட்டியார் வழிவழி வந்த ஆர்வமும் தமிழ்ப் புலமையும் எழுத்து பதிப்புத்துறையில் இவரை ஆட்படுத்தின. பழநியப்ப செட்டியார் - மனோன்மணி ஆச்சியின் மகனாக 7.6.1920-இல் தேவகோட்டையில் பிறந்தவர் முல்லை முத்தையா.

முத்தையா தனது இளம் வயதிலேயே தமிழும் சமஸ்கிருதமும் பயின்றார். தேவகோட்டையில் உயர்நிலைப் பள்ளிக் கல்வி பயின்றார். நகரத்தார் குலவழக்கப்படி பர்மா சென்றார். பர்மாவில் வட்டித் தொழில் செய்து வந்த முத்தையாவிற்கு நாள்தோறும் திருக்குறள் படிக்கும் வழக்கம் இருந்தது. பண்டைத் தமிழ் நூல்களை ஆர்வத்துடன் படிப்பார். அங்கு தமிழ் இளைஞர்கள் பாரதிதாசன் பாடல்களை உணர்ச்சியுடன் பாடக்கேட்ட முத்தையாவிற்குப் பாரதிதாசனிடம் ஈடுபாடு ஏற்பட்டது. இதுவே பாரதிதாசன் நூல்களைப் பின்னாளில் மிகச் சிறப்பாகப் பதிப்பிக்கக் காரணமாக அமைந்தது.

உலக இலக்கியங்களில் ஈடுபாடு கொண்ட முத்தையா ஆங்கில நூல்களையும் ஆர்வத்துடன் படித்தார். பின்னாளில் உலகின் மிகச் சிறந்த நாவல்களைத் தமிழில் மொழி பெயர்க்க இது அடித்தளமாக அமைந்தது. பர்மாவில் தமிழர் தொழில் செய்ய இயலாத சூழலில் இந்தியா திரும்பினார். 1942-இல் வை. கோவிந்தனாரின் 'சக்தி' இதழில் ஆசிரியர் குழுவில் சேர்ந்தார். 1943-இல் தானே ஒரு பதிப்பகம் தொடங்கினார். அன்று தொடங்கிய முல்லை முத்தையாவின் தமிழ்ப் பணி 9.2.2000 அன்று அவர்கள் இயற்கை எய்தும் வரை எண்பது ஆண்டுகள் வாழ்ந்த அவரது தமிழ்ப் பயணமாக அமைந்தது.

முத்தையா தொடங்கிய முதல் பதிப்பகம் கமலா பிரசுராலயம். முதல் நூல் தினமணி ஆசிரியராக இருந்த டி.எஸ். சொக்கலிங்கம் எழுதிய 'எனது ராஜினாமா' என்ற நூல், அன்று பத்திரிகை உலகில் பரபரப்பாகப் பேசப்பட்ட சொக்கலிங்கத்தின் ராஜினாமா காரணங்களை முதல் நூலாக வெளியிட்ட முத்தையாவின் மதிநுட்பம் அவரைப் பற்றி எல்லோரையும் பேச வைத்தது. அந்நூலில் முத்தையா எழுதிய பதிப்புரை தமிழ்ப் பத்திரிகை வரலாற்றில் இடம்பெற வேண்டிய ஆவணம்.

பதிப்புத் துறையில் வெற்றிக்கொடி நாட்ட மிகக் கவனமாக நூல்களைத் தேர்ந்தெடுத்து வெளியிடும் அவரது முயற்சிக்கு அடுத்த வெளியீடும் சான்றாகும். ராஜாஜி எழுதிய 'மதுவிலக்கு - கள் ஒழிக' என்ற நூல்தான் அது. பெரும் வரவேற்பைப் பெற்ற அந்த நூல் இன்றைய சமுதாயத்திற்கும் கூடத் தேவையாக இருக்கிறது.

பாரதிதாசன் நூல்களை வெளியிடுவதற்காகவே 1944-இல் முல்லை பதிப்பகம் முத்தையாவால் தொடங்கப் பெற்றது. அதன் முதல் வெளியீடு பாரதிதாசனின் 'அழகின் சிரிப்பு' நூல். தொடர்ந்து பாரதிதாசனின் பாண்டியன் பரிசு, குடும்ப விளக்கு, நல்ல தீர்ப்பு, இருண்ட வீடு, எதிர்பாராத முத்தம், காதல் நினைவுகள், தமிழியக்கம் முதலிய நூல்களை முல்லை முத்தையா பதிப்பித்து வெளியிட்டார். 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' எனப் பாரதியார் பாடியதற்கேற்ப, பாரதிதாசன் நூல்களை மிகச் சிறந்த முறையில் வடிவமைத்து வெளியிட்டு உலகெங்கும் பரப்பியது முல்லை பதிப்பகம். இந்நூல்களின் வருவாயைத் தொகுத்து புரட்சிக் கவிஞருக்குப் புதுச்சேரியில் ஒரு வீடு வாங்கிக் கொடுத்தார். அதுவே புரட்சிக்கவிஞர் அருங்காட்சியகமாக புதுச்சேரியில் இன்று அமைந்துள்ளது. 'புரட்சிக் கவிஞர்' என்ற ஆய்வு நூலை முத்தையா தொகுத்து வெளியிட்டார். இவ்வகையில் தமிழில் வெளிவந்த முதல் நூல் இதுவே. புதுமைப்பித்தனுக்கும் அவ்வாறு ஒரு நூல் வெளியிட்டார். 1957-இல் முல்லை முத்தையா தொடங்கிய 'தமிழகம்' பதிப்பகம் வாயிலாக 42 நூல்கள் வெளிவந்தன.

உவமைக் கவிஞர் சுரதாவின் முதல் நூல் 'சாவின் முத்தம்' 1946-இல் முத்தையாவால் வெளியிடப் பெற்றது. சமூகச் சிந்தனை நூலாசிரியராகப் பின்னாளில் புகழ்பெற்ற டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தியை நூல் எழுதத் தூண்டி அவரது நூல்களை முதலில் வெளியிட்டவர் முத்தையா. புகழ்பெற்ற நாவலாசிரியரான லட்சுமியின் நாவல்களை மற்ற பதிப்பகங்கள் வெளியிட்டபோது சிறந்த மருத்துவரான லட்சுமியின் 'தாய்மை' என்ற நூலை முத்தையா வெளியிட்டார். பாரதியார் கதைகள், பாரதியாரின் பகவத்கீதை, காதம்பரி, 1001 இரவுகள் முதலிய நூல்களை மலிவுப் பதிப்பாக வெளியிட்டார்.

○○○

பண்டித நடையில் வெளிவந்த பத்திரிகைகள் அன்று சாதாரண மக்களிடம் போய்ச் சேரவில்லை. இந்த நிலையில் எளிய இனிய நடையில் இதழ் வெளியிட வேண்டியது சமுதாயத் தேவை என உணர்ந்த முத்தையா 1946 தைத் திங்களில் 'முல்லை' முதல் இதழை வெளிக்கொணர்ந்தார். அப்போது புரட்சிக் கவிஞர் தொடர்ந்து எழுதி வந்தார். புதுமைப்பித்தன், ரகுநாதன் போன்றோருக்கு அன்றைய இதழ்கள் உரிய இடமளிக்காத நிலையில் முல்லை, அவர்களுக்குச் சிறப்பளித்துத் தமிழ் இதழ் வளர்ச்சியில் தனி இடம் பெற்றது. திரு.வி.க. பரலி சு. நெல்லையப்பர், கவிமணி ஆகியோர் முல்லையை வாழ்த்தி வரவேற்றிருக்கிறார்கள். ஓவியங்களுக்குச் சிறப்பளித்து முல்லை இதழில் வெளியிட்டிருக்கிறார். அன்றைய இதழியல் உலகின் நடப்புக்களைக் 'கிசுகிசு' போல வெளியிட்டிருக்கிறார். பிற மொழிக் கதைகளை மொழிபெயர்த்து முல்லையில் வெளியிட்டார். முல்லை 13 இதழ்கள் வெளிவந்தன. அவற்றைத் தொகுத்து முல்லை முத்தையாவின் மைந்தர் பழநியப்பன் "முல்லை இலக்கியக் களஞ்சியம்" என்ற பெயரில் அழகிய நூலாக வெளியிட்டுள்ளார்.

திருக்குறளில் மிகுந்த ஈடுபாடு கொண்ட முத்தையா உரை, உவமைகள், முத்துக்கள், விளக்கம் போன்ற பல நூல்களை எழுதியுள்ளார். டால்ஸ்டாயின் அன்னா கரீனா, மாக்சிம் கார்க்கியின் தாய், மேடம் பவாரி, நாநா போன்ற நூல்களை எளிய இனிய தமிழில் சுருக்கி மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளார். மொழி பெயர்ப்பு போலவே தோன்றாது ஒரு நூலை எவ்வாறு மொழிபெயர்க்க வேண்டும் என்பதற்கு இவரே வழிகாட்டி. நூல்களைத் தொகுப்பதில் மிக வல்லவர். அவ்வகையில் முருகன் அருள் செல்வம் (600 பக்கங்கள்) அகல்யா ஆகியவை மிகச் சிறந்த தொகுப்பு நூல்கள்.

பாவேந்தர் நூல்களை முதன் முதலில் வெளியிட்டமைக்காக தமிழக அரசு 'பாவேந்தர் விருது' வழங்கியது. 'திருக்குறள் நெறித் தோன்றல் என்ற விருதையும் அளித்துப் பாராட்டியது. தமிழ்ப் பதிப்புலகில் 'விற்பனை உரிமை' என்ற வழியை அறிமுகப்படுத்தியவர் இவரே. தேர்ந்த தொகுப்பாளர், சிறந்த எழுத்தாளர், ஆற்றல் வாய்ந்த மொழி பெயர்ப்பாளர் விரைவில் நூற்றாண்டு காணவிருக்கும் காலஞ்சென்ற முல்லை முத்தையா.

16



முனைவர் சுப. அண்ணாமலை
(10.10.1929-20.11.2011)

வைரவன் கோவில் - பெரிய வகுப்பு, தேவகோட்டை
தமிழ்ப் பேராசிரியர், கல்லூரி முதல்வர்

மு.அ. சுப்பிரமணியன் செட்டியார் - சீதை ஆச்சியின் மகன். தந்தையார் தேசிய இயக்கத்தில் ஆர்வமும் தமிழ்ப்பற்றும் கொண்டவர். ஆகவே, இவருக்கு இளமையிலேயே தமிழ்ப் பற்றும் இசை, கலை இலக்கியத்தில் ஈடுபாடும் ஏற்பட்டன.

இவர் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பி.ஓ.எல். (ஹானர்ஸ்) பயின்று பல்கலைக் கழக முதன்மை பெற்றுத் தேறினார். சர். ஜான் லாசரஸ் தங்கப்பதக்கம் வென்றார். 'பழந்தமிழகத்துக் கலைகளும் அறிவியலும்' என்னும் தலைப்பில் ஆய்வு செய்து 1962இல் எம்.லிட். பட்டமும் இராமலிங்க வள்ளலாரின் நூல்களில் ஆய்வு செய்து 1968இல் டாக்டர் பட்டமும் பெற்றார்.

இவர் கோவை பூ.சா.கோ கலைக் கல்லூரியில் ஓராண்டும் மதுரை தியாகராசர் கல்லூரியில் 1953 முதல் 1988 வரை முப்பத் தைந்தாண்டுகளும் தமிழ்ப் பணியாற்றி யுள்ளார். தியாகராசர் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராகவும் பதினோராண்டுகள் கல்லூரி முதல்வராகவும்

பணிபுரிந்துள்ளார். 1981ஆம் ஆண்டில் தமிழக அரசு இவரைச் சிறந்த கல்லூரி முதல்வர் எனப் பாராட்டி விருது வழங்கிச் சிறப்பித்தது.


'வள்ளலார் வாழ்வும் வாக்கும்' என்னும் இவரது ஆங்கில நூலை (Life and Teachings of St. Ramalingar) பாரதீய வித்யாபவன் வெளியிட்டுள்ளது. உருவும் உணர்வும், பண்சுமந்த பாடல், கல்லும் கனியாகும், மக்களை எட்டிய மறைத்தமிழ், திருக்குறள் சிந்தனை, பன்னிரண்டாம் திருமுறை ஆகியன இவர் படைத்த பிற நூல்களாகும். ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ள இவர் 22 முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கு வழி காட்டியாக இருந்து நெறிப்படுத்தியுள்ளார். பணி ஓய்வுக்குப் பின் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் திருமந்திரத்தில் ஆய்வு மேற்கொண்டார். பல்வேறு பாட வேறுபாடுகளை ஆராய்ந்து சிறந்த உரை யெழுதி வெளிவந்துள்ள திருமந்திரம் செம்பதிப்பு நூலை கோவிலூர் மடாலய ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ நாச்சியப்ப சுவாமிகள் வெளியிட்டார்கள். இந்நூல் இவரது வாழ்க்கைச் சாதனையாகும்.

'நகரத்தார் குரல்' இதழில் 'குருத்து' எனும் புனைபெயரில் எழுதியுள்ள 'வாழையடி வாழை' என்னும் தொடர் நகரத்தார் சமூக மரபுகள், பண்பாட்டு வளர்ச்சி, சடங்குகள் ஆகியவற்றை ஆய்ந்து விளக்கும் கட்டுரை களாகும். 'மணிவண்ணன் மடல்' என்னும் தலைப்பில் நகரத்தார் சமூகச் சீர்திருத்தம் குறித்து இவர் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

இளமையிலேயே பொதுப் பணியில் ஆர்வம் கொண்ட இவர் தேவகோட்டை சேக்கிழார் திருநாட்கழக விழாவில், ஆர்வமுடன் பணியாற்றிய சேக்கிழார் தொண்டராவார். மதுரை நகரத்தார் சங்கத்தின் செயலராக முப்பது ஆண்டுகட்கு மேல் தொண்டு புரிந்துள்ளார். மதுரை இராமலிங்கர் பணிமன்றத் துணைத் தலைவராகவும் மதுரை அண்ணாநகர் சர்வேஸ்வரர் கோவில் அறங்காவலர் குழுத் தலைவராகவும் சமயத் தொண்டு செய்துள்ளார். பண்ணார் தமிழ் வல்ல அண்ணாமலையார் நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் சைவப் பணியும் தமிழ்ப்பணியும் மேற்கொண்டவர்.

OOO

17



வானதி திருநாவுக்கரசு

(12.8.1927 - 19.1.2016)

தேவகோட்டை வைரவன் கோவில் நகரத்தார். இவரது தந்தையார் ஏகப்ப செட்டியார். தாயார் காளியம்மை ஆச்சி. தேவகோட்டை திருவேங்கடமுடையன் பள்ளியிலும் நகரத்தார் உயர்நிலைப் பள்ளியிலும் கல்வி பயின்றவர்.

தமிழ்ப் பண்ணையில் எழுத்தாளராகத் தனது வாழ்க்கையை தொடங்கியவர். தியாகி இதழ் அச்சகத்திலும் நவயுகப் பிரசுராலயத்திலும் பணியாற்றியுள்ளார்.

இயல்பாகவே தமிழ் ஆர்வம் கொண்ட இவரைப் பதிப்பகம் சார்ந்த பணிகள் மிகச் சிறந்த புத்தகப் பதிப்பாளராக உயர்த்தியது. ஜில் ஜில், கோமாளி, மிட்டாய், வெண்ணிலா என்ற சிறுவர் இதழ்களையும் நடத்தியுள்ளார். எழுத்தாளர் கல்கியின் எழுத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர் கல்கிதாசன் எனப் பெயர் சூட்டிக் கொண்டார். அரசு என்பதும் இவரது மற்றொரு புனைப்பெயர். கல்கியின் மீது கொண்ட ஈடுபாட்டால் தன் பதிப்பகத்துக்கும் தன் மகளுக்கும் வானதி எனப் பெயர் சூட்டினார். **1955**இல் வானதி பதிப்பகத்தைத் தொடங்கினார். கங்கை புத்தகநிலையம் இதன் துணை நிறுவனமாகும்.

ராஜாஜியின் இராமாயணம், மகாபாரதம், வாரியாரின் நூல்கள், காஞ்சிப் பெரியவரின் 'தெய்வத்தின் குரல்', ஆறு தொகுதிகள் முழுவதும், லக்ஷ்மி நரசிம்மாச்சாரியாரின் குறையொன்றுமில்லை பல தொகுதிகள் என ஆன்மிகத்தை வளர்த்த இவரது நூல்கள் மிகப் மிகப் புகழ்பெற்றவை.

கண்ணதாசன் கவிதைகள், திரைஇசைப் பாடல்கள், அர்த்தமுள்ள இந்துமதம் பல்வேறு தொகுதிகள் கவியரசர் கண்ணதாசனின் புகழையும் வானதி பதிப்பகத்தின் புகழையும் உயர்த்திய நூல்கள்.

அ.ச. ஞானசம்பந்தன் தொகுத்த தேவாரம், திருவாசகச் சிந்தனைகள், பெரிய புராணம் - ஓர் ஆய்வு, சேக்கிழார் அடிச்சுவட்டில் ஆகியவை சைவ சமய வளர்ச்சி கருதி இவர் வெளியிட்ட நூல்கள்.

சாண்டில்யன் போன்றோரின் புகழ் பெற்ற நூல்கள் வானதியின் புத்தக விற்பனையைப் பன்மடங்கு பெருக்கின.

சோம.லெ. எழுதித் தொகுத்த 'செட்டிநாடும் செந்தமிழும்' நூலை வெளியிட்டுத் தாம் பார்த்த சமூகத்துக்கும் தமிழ்மொழிக்கும் பெருந்தொண்டு செய்துள்ளார்.

டாக்டர் எம்.எஸ்.உதயமூர்த்தி எழுதிய தலைமைப் பண்பு பற்றிய சுய முன்னேற்ற நூல்கள் தமிழக இளைஞர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றன. இது தமிழ்ச் சமூகத்துக்கு இவர் செய்த பெருந் தொண்டாகும்.

கம்பன் கழகம், பாரதி கழகம் இலக்கியச் சிந்தனை அமைப்புக்களோடு இணைந்து நூல்களை வெளியிட்டமை இவர் தமிழ் மொழிக்குச் செய்த பெருந்தொண்டாகும்.

'நினைக்க நினைக்க', 'சின்னத்தம்பியின் பெரிய உள்ளம்', 'காஞ்சிப் பெரியவா' போன்ற நூல்களை

எழுதிய இவர் தனது வாழ்க்கை வரலாற்றை தமது அனுபவங்களை 'வெற்றிப்படிகள்' என்னும் நூலாக எழுதியுள்ளார்.

"எந்த ஒரு முயற்சியினாலும் திட்டவட்டமான குறிக்கோள் இருக்க வேண்டும் என்பதில் எனக்கு அழுத்தமான நம்பிக்கை உண்டு. அதேபோல எந்தச் செயலில் ஈடுபடுவதானாலும் முதல் தரமானவற்றையே சிந்திக்க வேண்டும். ஆங்கில வழக்கில் AIM HIGH என்பார்கள்.

தமிழில் திருவள்ளுவர் இந்தக் கருத்தை மிகவும் அழகான கவிதை நயத்தோடு வெளியிட்டிருப்பதை நம்முடைய இளைய தலைமுறை நன்றாக மனதில் வளர்த்துக் கொள்ள வேண்டும் என ஆசைப்படுகிறேன்.

காண முயலெய்த அம்பினில் யானை
பிழைத்த வேல் ஏந்தல் இனிது

எதைக் கண்டாலும் ஒதுங்கி நிற்பது, தயங்குவது, நம்பாமல் இது முடியுமோ என்று சந்தேகப்படுவது இந்தக் குணக்கேடுகள் தாம் இன்றைய இளைய தலைமுறையினரைச் சீர் குலைக்கின்றன. அனைவரும் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொண்டு உழைத்து வாழ்க்கையில் படிப்படியாக முன்னேற்றம் காண என்னுடைய வரலாற்றின் நிகழ்வுகள் உதவுமானால் என்னுடைய மனம் பேருவகை அடையும்" என வானதி திருநாவுக்கரசு வெற்றிப்படிகள் நூலில் இளைஞர்களுக்கு வழி காட்டுகிறார்.

பதிப்புலகின் சிகரம் தொட்டு விற்பனையை வானளவு உயர்த்திய சாதனையாளர் வானதி திருநாவுக்கரசு.

OOO

18



தமிழ்வாணன்

(22.5.1926 - 10.11.1977)

தேவகோட்டை மாத்தூர் கோவில் மணலூர்ப் பிரிவு நகரத்தார் - தந்தையார் லெட்சுமணன் செட்டியார் தாயார் பிச்சம்மை ஆச்சி பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் இராமநாதன். தமிழ்ச் சான்றோர் திரு.வி.க. இவருடைய தமிழாற்றலைப் பாராட்டி வழங்கிய பெயர் தமிழ்வாணன். அதுவே இவரது புகழ்ப் பெயராக நிலைத்தது.

தேவகோட்டையில் பள்ளி இறுதித்தேர்வு (SSLC) வெற்றி பெற்றார். பயிலும் காலத்திலேயே தமிழார்வம் உடையவர். பள்ளிக் காலத்திலேயே 'தமிழ் மணம்' என்னும் கையெழுத்து இதழை நடத்தினார்.

பத்திரிகை அலுவலகத்தில் அலுவலகப் பையன் எனும் பணியில் தொடங்கி உதவி ஆசிரியர் எனப் படிப்படியாக உயர்ந்து சக்தி வை.கோவிந்தன் நடத்திய 'அணில்' சிறுவர் இதழின் ஆசிரியரானார். பின்னர் குமுதம் ஆசிரியர் எஸ்.ஏ.பி. தொடங்கிய 'கல்கண்டு' இதழின் ஆசிரியரானார். அது இவரது வாழ்க்கையின் மாபெரும் திருப்புமுனை ஆயிற்று.

சில ஆண்டுகளிலேயே 'குமுதம்' விற்பனையை மிஞ்சும் அளவுக்கு கல்கண்டு வளர்ந்தது. அந்தக் காலத்திலேயே 40000 பிரதிகள் விற்பனை ஆயின. அத்தகைய மாபெரும் வளர்ச்சிக்கும் காரணம் தமிழ்வாணனின் தன்னம்பிக்கை விடாமுயற்சி அறிவுத்தேடல் உழைப்பு கடும் உழைப்பு ஆகியவையே. முன் அட்டை முதல் பின் அட்டை வரை கல்கண்டு இதழில் எல்லாம் தமிழ்வாணன் எழுத்து, தேடித் தேடிப் படித்து எழுதி எழுதிக் குவித்து எழுத்துலக இமயமாக விளங்கினார். குழந்தைகளுக்காக எழுதத் தொடங்கிய இவர் இளைஞர்கள் மிகமிக விரும்பிப் படிக்கும் இளைஞர்களின் இலட்சிய எழுத்தாளர் ஆனார்.

கறுப்புக் கண்ணாடி தலையில் தொப்பி கம்பீரமான தோற்றம் தமிழ்வாணனின் தனித்துவ அடையாளம். தமிழ்வாணன் என்ற கம்பீரமான பெயர், 'துணிவே துணை' என்ற குறிக்கோள் வாசகம். அதுவே இவரை வாழ்க்கையில் மேலும் மேலும் உயர்த்தியது.

எழுத்தாளர் என்றவகையில் பல புதிய உத்திகளைத் தமிழ் இதழியல் உலகுக்கு அறிமுகப்படுத்திய பெருமைக்குரியவர் தமிழ்வாணன். அதில் குறிப்பிடத்தக்கது 'கேள்வி பதில்' பகுதி. அப்போது அது புதுமை. அன்றைய இளைஞர்களின் அறிவுக் களஞ் சியமாக விளங்கியது. 1948இல் இருந்து தமிழ்வாணன் மறையும் வரை தொடர்ந்து 29 ஆண்டுகள் கல்கண்டு இதழின் ஆசிரியராக இருந்து அதை வெற்றிகரமாகத் திறம்பட நடத்தினார்.

'துணுக்குகள்' என்ற குறுஞ்செய்தி வடிவத்திற்கு இதழியல் அந்தஸ்து பெற்றுத் தந்தவர் தமிழ்வாணன். உலகம் முழுவதிலும் உள்ள பல்வேறு துறைகளையும் சார்ந்த செய்திகளையும் துணுக்குச் செய்திகளாக வெளியிட்டுத் 'தமிழ்வாணன் பாணி' என்ற ஒன்றை உருவாக்கினார். ஆகவே கல்கண்டு இவரை 'Master of All Subjects' என்று போற்றியது. ஒரு தனிமனிதனின் இதழியல் சாதனை கல்கண்டு.

இவர் மிகச் சிறந்த நாவலாசிரியர். கானன்டாலில் எனும் எழுத்தாளர் படைத்த 'ஷெர்லாக் ஹோம்ஸ்' பாத்திரத்தை வாழும் மனிதர் என்றே மக்கள் நம்பியதைப் போல் தமிழ்வாணன் படைத்த 'சங்கர்லால்' பாத்திரத்தையும் உயிருள்ள மனிதர் என்றே மக்கள் நம்பினர். கதைமாந்தர்களுக்குத் தமிழ்ப் பெயர்களைச் சூட்டுவது இவர் தனிச்சிறப்பு. தமிழ்வாணனின் துப்பறியும் நாவல்கள் இன்றும் புகழ் பெற்றவை ஆகும்.

வரலாற்றுக் கட்டுரைகள், ஜோசியம், மருத்துவக் கட்டுரைகள் என ஏராளமாக எழுதிய இவர் 500க்கும் மேற்பட்ட நூல்களைப் பல்வேறு துறைகளில் எழுதியுள்ளார். தம் எழுத்துக்களைத்தாமே பதிப்பித்து வெளியிடுவதற்காக 1955இல் மணிமேகலைப் பிரசுரம் என்ற பதிப்பகத்தைத் தொடங்கினார். தமிழ்வாணன் தமது நூல்களை மட்டும் வெளியிடும் நோக்கத்துடன் இதை ஆரம்பித்து 26 வருடங்கள் இக்கொள்கையில் உறுதியாக இருந்தார்.

தமிழ்வாணன் இயற்கை எய்தியபோது 'கணையாழி' இதழ் பின்வருமாறு எழுதியது:

"தமிழ்வாணன் தாம் எழுதிய நூல்களைத் தாமே தம்மால் தம்மனைவி பெயரால் ஆரம்பிக்கப்பட்ட மணிமேகலைப் பிரசுரத்தில் வெளியிட்டார். தம் நூல்களை வெற்றிகரமாகவும் சந்தைப்படுத்தினார். தமிழக எழுத்தாளர்கள் பலரும் எழுதினர். பலரும் சுயமாக வெளியிட முன்வரவில்லை. முன்வந்த எழுத்தாளர் யாரும் தமிழ்வாணன் அளவுக்கு வெற்றிகரமாகச் சந்தைப்படுத்தியதாகத் தெரியவில்லை. இவ்வகையில் மணிமேகலைப் பிரசுரம் அரிய கிரகத்தைச் சேர்ந்த ஒன்று. 1977 நவம்பரில் தமிழ் இலக்கிய எழுத்துலகில் இதழியல் உலகில் தடம்பதித்த தமிழ்வாணன் இயற்கை எய்தினார்.



ஸ்ரீ ல ஸ்ரீ அருணாசல
ஞான தேசிகர் சுவாமிகள்



ஸ்ரீ ல ஸ்ரீ சிதம்பர
ஞான தேசிகர் சுவாமிகள்



ஸ்ரீ ல ஸ்ரீ மஹாதேவ
ஞான தேசிகர் சுவாமிகள்




பெரிய மைனர்



வீர. லெ.சிந்நய செட்டியார்



அருணாசலம் சுவாமிகள்




பாலகவி வே. இராமநாதன்
செட்டியார்



வள்ளல் மேனா



சின்ன அண்ணாமலை




சுப. அண்ணாமலை



வானதி திருநாவுக்கரசு



தமிழ் வாணன்



முல்லை முத்தையா

இந்நூலை தொகுத்து வழங்கியவர்
முனைவர்
சபா. அருணாசலம்

